26 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

தூர பணமாற்றும் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2016

# கனேடிய நாடாளுமன்ற மேற்சபையின் நிலை!

கனேடிய நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர்களில் சிலர் பொதுமக்களின் வரிப்பணத்தை தவறாக பயன்படுத்தினர் என கனடாவின் முன்னாள் பழமைவாதக் கட்சி அரசாங்கம் குற்றம் சாட்டியிருந்தது. அவர்களில் செனட்டர் மைக் டஃவி (Mike Duffy) இன் மீது நம்பிக்கை மோசடி, ஊழல் மற்றும் இலஞ்சம் போன்ற 31 குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கிற்கு 62 நாட்கள் விசாரணையின் பின்னர் ஒன்ராரியோ மாகாண நீதிபதி சார்ள்ஸ் வலன்கோர் (Charles Vaillancourt) 2016 ஏப்பிரல் 21இல் 308 பக்கங்களில் தீர்ப்பை வழங்கியிருந்தார்.

நீதிபதியின் தீர்ப்பை அடுத்து கருத்து தெரிவித்த மைக் டஃவி யின் சட்டத்தரணியான டொனால்ட் பெயின் (Donald Bayne) நீதிபதியின் தீர்ப்புமூலம் மைக் டஃவி குற்றம் அற்றவர் என மிகவும் ஆணித்தரமாக நிருபிக்கப்பட்டுள்ளது (Resounding acquittal) என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் செனட்டர் மைக் டஃவி கடந்த மூன்று ஆண்டுகளாக கனடாவின் சரித்திரத்திலேயே எந்த ஒரு கனேடிய பிரஜைக்கும் ஏற்பட்டிராத அளவிற்கு பொதுமக்கள் முன்நிலையில் அவமானப்படுத்தப்பட்டிருந்தார் என்றார். பொதுமக்கள் அரசியல்வாதிகள் மீது எவ்வித விசாரணைகளும் இல்லாமல்




அதில் அவர் முன்னாள் கனேடிய பிரதமர் அலுவலகத்தின் நடவடிக்கைகள் மனதை உறையவைக்கும் மற்றும் அதிர்ச்சி தரக் கூடியதாகவும் இருந்தன என குற்றம்சாட்டி செனட்டர் மைக் டஃவி மேல் சுமத்தப்பட்ட 31 குற்றச்சாட்டுக்களில் 27ஐ தள்ளுபடி செய்தும் ஏனைய நான்கு குற்றச்சாட்டு களில் இருந்தும் அவர் குற்றமற்றவர் என விடுதலை செய்தும் தீர்ப்பு வழங்கினார். நீதிபதி மைக் டஃவி யின் நடத்தை நியாய மானதும் நேர்மையானதும் (Reasonable and honest) என்றும் அவரது சாட்சியம் நம்பக்கூடியதாக இருந்தது (Credible witness) எனவும் தெரிவித்திருந்தார்.

உடனடியாகவே தமது தீர்ப்பை வழங்குகிறார்கள். அரசியல்வாதிகளும் மற்றவர்கள் மாதிரி வழக்கு விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டே தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்றார்.

ஒன்ராரியோ மாகாண நீதியரசர் சார்ள்ஸ் வலன்கோர் தனது தீர்ப்பில் முதலில் தனக்கு நடந்த சம்பவம் ஒன்றை விபரித்திருந்தார். இந்த வழக்கின் ஆரம்ப நாட்களில் ஒரு நாள் மதியஉணவு அருந்திவிட்டு நீதிமன்றம் நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது அவ்வழியில் செல்வோரிடம் பணம் கேட்டுக் கொண்டிருந்த ஒரு வதிவிடம் இல்லாதவர் தன்னிடமும் 'ஐயா, ஐயா' என்றார். நானும் அவ்விடத்தில் நின்று எனது சட்டைப் பையினுள் சில்லறை இருக்கிறதா எனப்பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் பணம் ஏதும் கேட்காமல் எனக்கும் மைக் டஃவி யின் வழக்கு விசாரணைக்கும் ஏதும் தொடர்பு இருக்கிறதா எனக் கேட்டார். நானும் ஓம் என பதிலளித்தேன். அவர் மீண்டும் நான் ஒரு சட்டத்தரணியா என்று வினவினார். நானும் அவரிடம் அவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதிதான் என நான் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. அதைக் கேட்ட அவர் ஒரு கணம் கூட தாமதியாமல் மிகவும் ஆர்வத்துடன் 'அவரை சிறையில் தள்ளுங்கள்' என்று கூறினார் என தனக்கு நடந்ததை கூறிய நீதிபதி இச்சம்பவம் இரண்டு முக்கிய விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

முதலாவது, செனட்டர் மைக் டஃவி யின் இந்த வழக்கு விசாரணை எவ்வளவு தூரம் பொதுமக்களின் ஆர்வத்தையும் அவதானிப்பையும் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டுகிறது. மற்றையது, மிகவும் முக்கியமானது. ஒருவர் குற்றம் செய்தவர் என சட்டமூலம் தீர்மானிக்கும் வரை அவர் நிரபராதி என எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பெரும் பாலானோர் ஒருவர் மீது பாரிய குற்றச் சாட்டு சுமத்தப்படும்போது (Charged with criminal offence) அவர்கள் அவரை குற்றவாளி என்றே தீர்மானித்து விடுகிறார்கள். இந்த நாட்டின் சட்டம் அப்படிப்பட்டதல்ல என்ற ஆரம்ப உரையுடனேயே நீதிபதி தனது தீர்ப்பை வாசிக்கத் தொடங்கினார்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
My 1 priority is your satisfaction!
416-712-2006
5-year variable 2.25%

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

# வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!

Commitment Reliability Professionalism



Hall of Famer
CENTURION AWARDS

**Pat Pushpakanthan**
Full Time Real Estate Broker

PAT WILL BEAT ANY DEAL* !
**416 894-1187**

Century 21 BROKERAGE
80 Corporate Dr. Suite 410. Toronto M1H3G5
Off 416-290 1200

VISIT...WWW.PATPUSH.COM

Midland/ eglinton

3 bm 2 wsrm bsmnt finished

Hwy 11/9th concession

48.5 acre hobby farm

stouffville

700 k det home

Mclevin/ finch


2bm 2wsrm 249k

Kingston/salem ajax 499k


3 bm 3 wsrm semi detached

Ajax southeast 724k

Detach home 4 bm w/o bsmnt

## RENTAL CORNER

*3 bedroom house 1600/-*
*3 bedroom condo 1450/-*
*2 bm 2 wsrm condo 1550/-*
*2 bedroom condo 1350/-*
*1 bedroom + den condo 1400/-*

Sheppard ave e /donmills


2 bm 412/- main fee

Don mills step to future eglinton street car


Stats from 210 k

Mccowan/ bur oak

Newr condo fro builder

## THINKING OF SELLING, BUYING OR INVESTING

Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers

**Call me to find out how much your home worth.**

***Free Market Evaluation without any Obligations***

- ✔ TRUST
- ✔ HONEST
- ✔ GUARANTEE

*We do sell Cottages & Recreational Properties*


**Muthiah Sivabalan**
Sales Representative

***Friendly and Confidential Service Just Call***

**Cell: 416.399.6640**

msbalan78@gmail.com

NOT INTENDED TO SOLICIT PROPERTIES PRESENTLY UNDER CONTRACT



HomeLife/GTA Realty Inc.
Brokerage*
5215 Finch Ave. East, Suite #203
Toronto, ON M1S 0C2
Off: 416.321.6969 Fax: 416.321.6963
*Independently Owned and Operated

*Higher Standards Agents... Higher Results!*

**Friends** MATRIMONY



திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்


- ✔ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✔ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✔ அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**
**www.friendsmatrimony.com**
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |


CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
Ready To Take Your Education
TO THE NEXT LEVEL?
You could qualify for a
SCHOLARSHIP!
We are giving away scholarships equivalent up to $10,000 (CAD) to eminent students who want to pursue their studies in Business & Technology. Job placement assistance is provided for FREE.
Most of our Diplomas can lead to 6 figure salaries!
Contact us for full details and how to qualify:
learn@thecanadiancollege.ca • www.thecanadiancollege.com
*Terms & Conditions Apply


CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
INTRODUCTORY LESSON FOR BEGINNERS
We invite you to the 'World of IT'
Held the 1st Tuesday of every month at 5:30 pm
*until further notice
LEARN FROM THE EXPERTS ABOUT IT RELATED TECHNOLOGIES!
Data Processing
Database Administration
Programming
Systems Administration
Networking
Enterprise Resource Planning
In-memory Database
Cloud Computing
& more!
Get an overview of the most demanding IT related technologies such as:
Linux, UNIX, Cisco, SAP, SAP HANA, Sales Force etc.
REGISTER NOW! learn@thecanadiancollege.ca
(416) 850-1456
YOUR INVESTMENT IS $40 (CAD)!

GLORIOUSPRINTERS
www.gloriousprinters.com
Our goal is to help our clients to save more, and get more result.
Glorious.Printers1
9889 Markham Road, Unit-2, Markham, ON., L6E 0B7 T: 905.471.2500, F: 905.471.2501
printglorious@gmail.com, info@gloriousprinters.com gloriousweb.ca
• Business Cards • Flyers • Post Cards • Banners • Signs • Window Lettering
• NCR Form Invoices • Brochures • Menus • Posters • T-Shirt Printing • Mug Printing
• Photo Framing • Video • Photography • CD & DVD Covers • Car Magnets • channel letters etc.,
- and also do -
FedEx TNT DHL Purolator
Design | Wedding Cards | Printing | Photo | Video | Website

# ஜெயலலிதாவை தோற்கடிப்பேன்!

## ஆர்.கே. நகர் திமுக வேட்பாளர் சிம்லா முத்துச்சோழன்



தமிழக சட்டமன்றத் தேர்தலின் ஸ்டார் வேட்பாளராகியிருக்கிறார் சிம்லா முத்துச் சோழன். சென்னை ஆர்.கே. நகர் தொகுதி யில் முதல்வர் ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிடும் இவர் வழக்கறிஞர், சற்குண பாண்டியன் மருமகள் என்று திமுகவினர் மத்தியில் மட்டுமே அறியப்பட்டவர். இப்போது உலகம் முழுக்க தமிழர்கள் மத்தியில் அறியப்பட்ட ஒருவராகியிருக்கி றார். 1996 தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து வெற்றிபெற்ற திமுக வேட்பாளர் சுகவனம் போல், வரலாறு படைப்பாரா சிம்லா? ஆர்.கே. நகரில், ஒரு அபார்ட்மெண் டில் இரண்டு படுக்கையறை கொண்ட ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் சிம்லா முத்துச்சோழனை சந்தித்தோம்.

ஜெயலலிதா என்ற பலமான வேட்பாளரை எதிர்த்து உங்களால் வெற்றிபெற முடியுமா?

என் மாமியார் சற்குணபாண்டியனின் சொந்தத் தொகுதி ஆர்கே நகர். இரண்டு முறை அவர்கள் இந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ,ஆக இருந்திருக்காங்க. அந்தக் காலகட்டங்களில் தொகுதிக்காக அத்தை நிறைய திட்டங்களை செய்திருக்காங்க. அதன்பிறகு வெற்றி பெற்றவர்கள் எதுவும் செய்யாததால் கடந்த 15 வருஷத்தில் இந்த தொகுதி பின்தங்கியே இருக்கிறது. எனவே, இந்த முறை மக்கள் மாற்றம் வேண்டுமென்று நினைக்கிறார்கள். நான் நிச்சயம் வெற்றிபெறுவேன். என் அத்தை போல் இந்த மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவேன்.

ஜெயலலிதாவுக்கு எதிராக எதைச் சொல்லி வாக்குக் கேட்கப் போகிறீர்கள்?

நான் என்ன சொல்வது? எல்லாம்தான் மக்களுக்கே தெரியுமே. இங்கே நின்று வெற்றிபெற்ற பிறகு தொகுதிப் பக்கமே அந்தம்மா வரவில்லை. அதன்பின்னர் செம்பரம்பாக்கம் ஏரியை திறந்துவிட்டு சென்னையே வெள்ளத்தில் தத்தளித்த போது தொகுதியின் எம்.எல்.ஏ என்ற முறையில் வந்தாங்க. அதுவும், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தொகுதி மக்களைக்கூட பார்க்கவில்லை என்று வாட்சப், பேஸ்புக், ட்விட்டர்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...




MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487
RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232
மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்
நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாங்க, விற்க
மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,
பவர் ஒப் சேல் பிரச்சினையா ?
BEST RATES FOR "AAA" CLIENTS
5 Yrs Variable : Call Us
2 Yrs Fixed Rate : 2.09%* *OAC
5 Yrs Fixed Rate : 2.39 % *
"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
திங்கள்—வெள்ளி (call for an appointment)
வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00
கடன் தொல்லையில் இருந்து விடுபடுவோம்.
உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit
மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி
எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???
BEST RATE GUARANTEED
MORTGAGE IN ANY SITUATION
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)
ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843
And,,
For All Your Real Estate Services

# இனவாதிகளிடமும் சந்தர்ப்பவாதிகளிடமும் சிக்கித் தவிக்கும் சமஷ்டி!

சமஷ்டி என்ற வார்த்தையே தென்னிலங்கை யில் கசப்பான ஒன்றாக பார்க்கப்படுகின்றது. சமஷ்டியை பிரிவினைவாதமாக தெற்கின் இனவாத அரசியல்வாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு பற்றி ஆரம்ப காலம் தொட்டே பேசப்பட்டு வருகின்றது. தனி நாட்டிற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடிய காலத்தில் கூட மாற்றுத் தீர்வாக சமஷ்டி பற்றி பேசப்பட்டது. விடுதலைப்புலிகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகள் நடை- பெற்ற காலத்திலும் சமஷ்டி முறையிலான தீர்வு என்பதன் அடிப்படையிலேயே சர்வதேச அனுசரணையுடன் பேச்சுக் கள் இடம்பெற்றன. எவ்வகை யிலான சமஷ்டி அமைப்பு என்பது குறித்தே விவாதங்கள் அப்போது இடம்பெற்றன.

ஆனால், இன்று சமஷ்டி என்ற சொல் தெற்கில் தீவிரமான எதிர்ப்பிற்கு உள்ளாகி வருகின்றது. வழமையாகவே இனவாத கருத்துக்களை பரப்பி வருகின்ற தென்னிலங்கை அரசியல்வாதிகளும், மஹிந்தவிற்கு ஆதரவான பொது எதிரணியும் மட்டுமல்லாது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும் இதற்கு கடுமையான எதிர்ப்பினை அண்மைய நாட்களாக வெளியிட்டு வருகின்றன. சமஷ்டி ஆட்சிமுறையை ஆராய மட்டுமல்ல அதைப்பற்றி பேசுவதற்குக்கூட தாங்கள் தயாராக இல்லை என்று சுதந்திரக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பின் 13-ம் திருத்தம் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கி நடைமுறைப்படுத்தப்படாமல் இருக் கின்ற அதிகாரங்களை வழங்குவது பற்றி பேச்சு நடத்தினா லும், சமஷ்டி முறைக்கு ஒருபோதும் தமது கட்சி ஒத்து ழைப்பு வழங்காது என்றும் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ் தரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் வெளியிட்டுள்ள கருத்தும் கவனத்திற் கொள்ளக்கூடியது. நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு வரைவையோ, யோசனைகளையோ தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அவர் கூறியிருக்கின்றார். இதில் அவர் சுருக்கமாக கூறியிருப்பதன் அர்த்தத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இலங்கையின் புதிய அரசியலமைப்பில், சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வொன்றை கொண்டுவருவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் ஒன்றை அண்மையில் நிறைவேற்றியது.

நாட்டைப் பிரிக்காமல், தனித்து வாழும் அதேநேரம், அனைத்து மக்களுடனும் இணைந்து வாழவே தமிழர்கள் ஆசைப்படுவதாகவும், அதை மையப்படுத்தியே தமது தரப்பால் புதிய அரசியல் சாசனத்துக்கான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

வட மாகாணசபையின் தீர்வு யோசனை வெளியிடப்பட்டு, பின்னர் அது வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னரே தெற்கில் இந்தப் பிரச்சினை தற்போது மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

சமஷ்டி யோசனைகளை முன்வைப்பதே இனவாத செயற்பாடு என தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறுகின்றனர். அதே வேளையில் அது தெற்கில் இனவாதத்தை தூண்டும் செயல் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

சமஷ்டி முறையிலான தீர்வினையே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக, தாங்கள் முன்வைப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் கூறிவருகின்றனர். கூட்டமைப்பின் இவ்வாறான கருத்து இனவாதத்தை தூண்டும் செயல் என ஜே.வி.பி போன்ற கட்சிகள் கூறுகின்றன.



தெற்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், வடக்கில் விக்னேஸ்வரனும் மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

வட மாகாணசபையின் தீர்வுத்திட்ட யோசனை வரைபுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றில் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றையும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் பிர- திவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் தீர்மானம் தொடர்பில் குறித்த இரு கட்சிகளிடமும், வட மாகாண முதலமைச்சரிடமும் விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி சட்டத்தரணி ஒருவரால் உயர் நீதிமன்றில் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வட மாகாண சபையின் குறித்த தீர்வு யோசனையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் பட வேண்டும் எனவும் குறிப்பட்டுள்ளதற்கும் சேர்த்தே இந்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இந்நிலையில், சமஷ்டி வழியிலான தீர்வினை தென்னிலங்கை சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறுகின்றார். சமஷ்டி ஆட்சி நாட்டை பிரிக்கும் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் பிரச்சாரம் செய்துவருகின்றனர். அதனை அம்மக்கள் நம்புகின்றனர் எனவும் விக்னேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

சில நாட்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தை சுவீடனின் வெளியுறவு அமைச்சரை சந்தித்தபோது, வெளிநாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு உரிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்னொரு புறத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரனும் ஒற்றையாட்சிக்கு கீழான தீர்வு முறைக்கு இணங்கப் போவதில்லை எனவும், சமஷ்டி முறையிலான தீர்வையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருவதாகவும் மக்கள் மத்தியில் கூறி வருகின்றனர்.

சமஷ்டி என்ற பதம் தெற்கில் சிக்கலானதாக பார்க்கப்படுவதால் அதனை பயன்படுத்தாமல் அதிகாரங் களைப் பெற்றுக்கொள்வது என்ற எண்ணம் சம்பந்தன், சுமந்திரன் போன்றோருக்கு இருப்பதாக தோன்றினாலும், வட மாகாணசபையின் தீர்வு யோசனை வரைபி ற்கு பின்னர் அவர்களும் சமஷ்டி என்பதை வெளிப்படையாகவே பேசத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன், நாட்டிலுள்ள தமிழ் பேசும் சமூகங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்தே ஒரு தீர்வுத்திட்டத்தை கொண்டு வர முடியும் என்ற அடிப்படையில் முஸ்லிம் தலைவர்களிடமும் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சுமந்திரன் முஸ்லிம் தலைவர்களுடன் கலந்துரையாடல் களை மேற்கொண்டு வருகின்றார். வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம்களின் சம்மதத்துடன்தான் நடக்க வேண்டும் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த முழுநாள் செயலமர்வு மட்டக்களப்பில் கடந்த மாதம் 21ம் திகதி நடைபெற்றபோது, அதில் விரிவுரையாளராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சுமந்திரன், 'அரசமைப்பின் ஆறாவது திருத்தம் காரணமாக தமிழர் பிரதிநிதிகள் இழக்கப்பட்ட போதும், 13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக அது ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்த இடைவெளியை நிவர்த்தி செய்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் நான்கு விடயங்களை நீக்கும் முயற்சிக்கு ரவூப் ஹக்கீம் எதிர்ப்புத் தெரிவித்தார். அதை நான் வரவேற்கிறேன்.

**- விகிர்தன் -**

அதிகாரம் அர்த்தமுடையதாகப் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் அரசமைப்பு தொடர்பான நிலைப்பாட்டிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து நிற்கின்றன. இந்த நிலைப்பாடு தான் எம் இரண்டு இனங்களுக்கும் வெற்றியைக் கொண்டு வரும்" என்று குறிப்பிட்டார். ஆனாலும், முஸ்லிம் தலைவர்கள் இவ்வாறான கருத்துக்களுக்கு செவிசாய்ப்பவர் களாக தெரியவில்லை. வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைப்பதற்கான எந்தவொரு அவசியமும் ஏற்படவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கை இணைப்பது என்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனி ன் முக்கிய குறிக்கோளாக இருந்ததாகவும், வடக்கிலுள்ள பொதுமக்களுக்கோ அல்லது கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கோ அவ்வாறானதொரு தேவையொன்று இதுவரை யில் ஏற்படவில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் மொஹமட் நஸீர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் - தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை வேட்பாளரை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோகபூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப்பார்த்து வருகிறோம்.

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Bernie Sanders உம் ஆவர். குடியரசுக்கட்சியின் சார்பில் மூவர் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் Ted Cruz, John Kasich மற்றும் Donald Trump ஆவர்.

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர ஜனநாயகக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 ஏப்பிரல் 30 வரை நடைபெற்ற 42 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Hillary Clinton 1,645 பிரதிநிதிகளையும் Bernie Sanders 1,318 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக் கட்சிக்கான அடுத்த தேர்தல் மே 03இல் இன்டியானா மாநிலத்தில் நடைபெற உள்ளது. ஜனநாயகக்கட்சியின் தேசியமாநாடு 2016 யூலை 25இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர குடியரசுக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 ஏப்பிரல் 30 வரை நடைபெற்ற 42 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Donald Trump 992, Ted Cruz 562 மற்றும் John Kasich 153 பிரதிநிதிகளை பெற்றுள்ளார்கள். குடியரசுக்கட்சிக்கான அடுத்த தேர்தல் மே 03இல் இன்டியானா மாநிலத்தில் நடைபெற உள்ளது. குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohioஇல் நடைபெற உள்ளது.

## ஜனநாயகக்கட்சி

ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படத் தேவையான 2,383 பிரதிநிதிகளில் ஏற்கனவே Hillary Clinton 1,645 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்று விட்டார். கட்சிமாநாட்டில் பங்குபற்றும் ஜனநாயகக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித்தலைவர்கள் உட்பட சிலருக்கு தாம் விரும்பும் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கும் உரிமை உண்டு. அவர்களில் பலர் ஏற்கனவே தாங்கள் யாரை ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய தமது வாக்குகளை அளிப்போம் எனக் கூறிவிட்டனர். இவ்வாறு கூறியவர் களுடைய வாக்குகளையும் சேர்த்துப் பார்த்தால் Hillary Clinton இற்கு இதுவரை 2,165 பிரதிநிதிகளின் ஆதரவும் Bernie Sanders இற்கு இதுவரை 1,357 பிரதிநிதிகளின் ஆதரவும் கிடைத்துள்ளன.



இதுவரை 42 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் தேர்தல் முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள 14 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 1,243 பிரதிநிதிகள் இருக்கின்றனர். இவர்களில் 218 பிரதி நிதிகளின் ஆதரவை (18%) பெற்றாலே Hillary Clinton ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் மாநாட்டிற்கு முன்னரே ஊடகங்களால் உறுதிப்படுத்தப் பட்டு விடுவார்.

Bernie Sanders ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர இன்னமும் தெரிவு செய்யப்படவுள்ள 1,243 பிரதிநிதிகளில் 1,026 பிரதிநிதிகளின் ஆதரவை (83%) பெற வேண்டும். இது நடைமுறைக்கு சாத்தியமற்றது.

Hillary Clinton மீது அவர் முன்னர் (2009-2013) வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பான அரச செயலாளர் ஆக (Secretary of State) இருந்த போது அரச அலுவல்களுக்கு பாதுகாப்பான அரச மின்னஞ்சலைப் பாவிக்காமல் தனது தனிப்பட்ட பாதுகாப்பற்ற மின்னஞ்சலைப் பாவித்ததால் நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவித்துவிட்டார் என்று கூறி FBI விசாரணை நடத்துகிறது. இவ்விசாரணையின் விளைவால் Hillary Clinton இனுடைய ஜனாதிபதி வேட்பு மனுவிற்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டாலேயே ஒழிய Hillary Clinton ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவதில் எந்தவித ஐயப்பாடும் கிடையாது.

## குடியரசுக்கட்சி

குடியரசுக்கட்சியில் Donald Trump ஐ தவிர வேறு எவரும் ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக்கட்சியின் மாநாட்டுக்கு முன்னர் தெரிவு செய்யப்படுவது தற்போது சாத்தியமற்றதாகி விட்டது.


குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட தேவையான 1,237 பிரதிநிதிகளில் ஏற்கனவே Donald Trump 992 பிரதிநிதிகளின் ஆதரவை பெற்று விட்டார். இதுவரை 42 மாநிலங்களினதும் மற்றும் பிரதேசங்களிலும் தேர்தல் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 14 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 578 பிரதிநிதிகள் இருக்கிறனர். இவர்களில் 245 பிரதிநிதிகளின் ஆதரவை (43%) பெற்றால் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் மாநாட்டிற்கு முன்னரே ஊடகங்களால் உறுதிப்படுத்தப்பட்டுவிடுவார்.




குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர்களில் இரண்டாவது நிலையில் இருக்கும் Ted Cruz குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர இன்னமும் 675 பிரதி நிதிகளின் ஆதரவு தேவை. ஆனால் இன்னமும் தெரிவு செய்யப்பட உள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை 578. இதனால் Donald Trump ஐ தவிர வேறு எவரும் கட்சியின் மாநாட்டிற்கு முன்னர் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட முடியாது.

இதனாலேயே குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களாக இருக்கும் Ted Cruz உம் John Kasich உம் தற்போது மும்முரமாக Donald Trump இற்கு இன்னும் தேவையான 245 பிரதிநிதிகள் கிடைக்காமல் மீதமுள்ள 14 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் கூட்டுச்சேர்ந்து பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்களது நோக்கம் Donald Trump குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கு தேவையான 1,237 பிரதிநிதிகளின் ஆதரவை கட்சி மாநாட்டிற்கு முன்னர் பெறாமல் தடுப்பதுதான். இவ்வாறு தடுத்துவிட்டால் கட்சி மாநாட்டில் தாங்கள் இரண்டாவது அல்லது அதற்குப் பிறகு நடக்கும் வாக்கெடுப்புக்களில் ஜனாதிபதி வேட்பாளராக வர சாத்தியக்கூறுகள் இருக்கும் என நம்புகிறனர். இதன்படி இன்னும் தேர்தல் நடைபெறாத இடங்களில் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்க முன்வந்துள்ளனர். Ted Cruz இற்கு இன்டியானா மாநிலத்தை விட்டுக் கொடுத்துவிட்டு John Kasich ஒறகன் மற்றும் நியூமெக்சிகோ மாநிலத்தில் தனது பிரசாரங்களை மேற்கொள்வது என 2016 ஏப்பிரல் 24 இல் இருவரும் ஓர் உடன்படிக்கை செய்துள்ளனர்.

**சிவ ஞானநாயகன்**
vlambaram@sympatico.ca






# LAW OFFICE

## STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com




# சமூகத்தில் சவாலாக அதிகரித்து வரும் சீரழிவு நடவடிக்கைகள்!

- ஆதித்தன் -

வடக்கில் இன்று பிரதானமான பிரச்சினைகளாக இருப்பன காணாமல் போனவர்களை கண்டறிவது, கைதிகள் விடுதலை, படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது போன்றனவாகும். இவை அரசியல் சார்ந்த பிரச்சினையாக உள்ளதால் அரசியல்வாதிகளே இதற்கான தீர்வினை மக்களுக்கு வழங்க வேண்டும்.

மற்றுமொரு பிரச்சினையாக இருப்பது வன்முறைகளும், போதைவஸ்து பாவனையும், ரவுடித்தனமும். இவை பாரிய சமூகப் பிரச்சினையாக இன்று உருவெடுத்துள்ளது. இவ்வாறான, சமூக சீரழிவான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் இளைஞர்களாக. பாடசாலை மாணவர்களாக இருப்பதுதான் அதிர்ச்சி தரும் விடயமாகும்.

சில காலமாக குழுக்களாக இயங்கி, இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. சில குழுவினர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதனால் ஓரளவிற்கு இவை கட்டுப்பாட்டிற்குள் வந்தன. தற்போது நடைபெறும் குற்றச் செயல்களில் மாணவர்களே அதிகம் ஈடுபட்டு வருகின்றமை கண்டறிப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற வாள்வெட்டு சம்பவங்களில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். அதுவும் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் இச்சம்பவங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். சமூகத்தில் நன்மதிப்புடைய ஆசிரியர்கள் சிலரின் பிள்ளைகளே இவ்வாறு ரவுடித்தனங்களில் ஈடுபட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான மாணவர்கள் - இளைஞர்கள் பெற்றோருக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ கட்டுப்படுகின்றவர்களாக இல்லை. இவர்களை கட்டப்படுத்த பொலிஸாரின் நடவடிக்கை தற்போது கோரப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி திரு. இளஞ்செழியன் கடுமையான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார். ஏனெனில் பெற்றோரோ, பாடசாலைகளோ, சமூகமோ இவர்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் சம்பவங்கள் எல்லை மீறிச் சென்றுள்ளன.

ரவுடித்தனத்திலும் தெருச் சண்டித்தனத்திலும் ஈடுபடும் மாணவர்கள் சிறைத் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்று அண்மையில் நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை செய்துள்ளார். ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்கள் உயர் கல்விக்காகப் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலை உருவாகும் என்றும், தங்கள் பிள்ளைகளை கட்டுப்பாட்டில் வைப்பதற்கு அவர்களின் பெற்றோர்கள் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

குற்றம் செய்யும் மாணவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படும் போது, அவர்கள் மாணவர்கள் என்பதால் மன்னிப்போ, பிணையோ வழங்குமாறு கோரப்படுவதையும் நீதிபதி நிராகரித்துள்ளார். தனிமனித நலனைவிட சமூக நலனே நீதிமன்றத்திற்கு முக்கியம். எனவே, ரவுடித்தனத்திலும் தெருச் சண்டித்தனத்திலும் ஈடுபடும் மாணவர்களுக்கு, மாணவர்கள் என்ற ரீதியில் ஈவிரக்கம் நீதிமன்றத்தினால் காட்டப்படமாட்டாது. தெரு ரவுடிகளாகச் செயற்படும் பிள்ளைகளை, அவர்களுடைய பெற்றோர்கள் உடனடியாகக் கட்டுப் பாட்டினுள் கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சமூகக் குற்றச்செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் தொடர்பில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஒழுக்க சீலர்களாக மாணவர்களை மாற்றுவதற்கு இயலாத அல்லது அச்சப்படும் ஆசிரியர்கள் அச்சமில்லாத இடங்களுக்கு இடம் மாற்றம் பெற்றுச் செல்வது நல்லது. சமூகத்தைக் காப்பாற்றும் பொறுப்பில் இருந்து எந்த அதிபரும் ஆசிரியரும் தவறக் கூடாது எனவும் அவர் ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் கூறியுள்ளார்.

“யாழ். மாவட்டத்தில் தொண்ணூறு வீதமான குற்றச் செயல்கள் கட்டுப் பாட்டுக்குள் வந்திருந்த போதிலும், தற்போது சில வாள் வெட்டுச் சம்பவங்களும் தெரு ரவுடித்தனமும் கொள்ளைகளும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. யாழ். குடாநாட்டு நீதவான் நீதிமன்றங்கள் வாள்வெட்டு வழக்குகளில் சிறைத் தண்டனைத் தீர்ப்புக்கள் வழங்கி வருகின்றன. அதேநேரம் பாரிய குற்றச் செயல்களுக்கு பிணையில் வெளியில் வர முடியாத வகையில் குற்றம்சாட்டப்பட்ட சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றார்கள்.

யாழ். மேல் நீதிமன்றம் மரண தண்டனை மற்றும் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை என பாரிய குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கி வருகின்றது. போதை வஸ்து வழக்குகளில் கைது செய்யப் பட்டுள்ளவர்களுக்குக் கடந்த ஒரு வருட காலமாக, யாழ். மேல் நீதிமன்றம் பிணை வழங்கவில்லை. யாழ். குடாநாட்டு சமூகத்தையும் மாணவர்கள் - இளைஞர்களையும் போதைவஸ்து என்ற கொடூரப் பிணியில் இருந்து காப்பாற்றுவதற்காக நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும், சில நபர்கள் தெரு



ரவுடித்தனத்தையும் வாள் வெட்டுக்களையும் கைவிடுவதாக இல்லை.

பெற்றோர் இவ்விடயத்தில் முதல் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றார்கள். தெரு ரவுடித்தனத்தில் ஈடுபடுகின்ற மாணவர்கள், இளைஞர்களுக்கு மோட்டார் சைக்கிள், பெறுமதிமிக்க கைத்தொலைபேசி பெற்றோர்களினால் வாங்கிக் கொடுக்கப்படுகின்றது. தனது மகன் வெளியில் சென்று என்ன வேலை செய்கின்றான் என்று தெரியாத வகையில் பெற்றோர் காணப்படுகின்றார்கள்.

இத்தகைய மாணவர்கள், இளைஞர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை செய்கின்றது. சமூகக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உடன் கடும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

ரியூசன் செல்லும் மாணவிகளுக்குப் பின்னால் செல்லும் மாணவர்கள், இளைஞர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அடாவடித்தனம் செய்யும் தெரு ரவுடிகளை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாலை 6 மணியில் இருந்து 9 மணிவரையில் வீதிகளில் சட்டவிரோதமாகக் கூடும் இளைஞர்களைக் கைது செய்து அலைந்து திரிவோர் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு கொண்டுவர வேண்டும்.

குற்றச் செயல்கள் அதிகமாக இடம் பெறுகின்ற பிரதேசங்கள், சமூகக் குற்றச் செயல்களின் மையங்கள் என்ற சந்தேகத்திற்குரிய இடங்களில் பொலிஸ் சைக்கிள் ரோந்துகளை நடத்த வேண்டும். கண்காணிப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணிவரையில் பொலிஸ் வாகன ரோந்துகளை அதிகரிக்க வேண்டும். பிரபல கல்லூரிகளில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் ரவுடித்தனத்தில் ஈடுபடக் கூடாது. வாள் வெட்டு சம்பவங்களில் சம்பந்தப்படக் கூடாது. வீதிகளில் மாணவிகளைப் பின்தொடரக் கூடாது. தமது எதிர்கால வாழ்க்கை நாசமாகும் வகையில் சட்டவிரோத போதை வஸ்து பாவனை மற்றும் போதை வஸ்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

குற்றச் செயல்களில் சம்பந்தப்படுகின்ற காரணத்திற்காகக் கைது செய்யப்படும் எந்த ஒரு மாணவனுக்கும் நீதிமன்றத்தினால் பரிவு இரக்கம் காட்டப்படமாட்டாது. எதிர் காலத்தில் பல்கலைக்கழகத்திற்குக் கூட செல்ல முடியாத வகையில் சிறைத் தண்டனை தீர்ப்புக்கள் வழங்கப்படும். எனவே, குற்றச் செயல்களில் ஈடுபடும் தமது பிள்ளைகளை சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்” -இவ்வாறு நீதிபதி இளஞ்செழியன் கூறியுள்ளார்.

தற்போது யாழ். குடாநாட்டில் பொலிஸார் இது தொடர்பில் நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதை காண முடிகின்றது. மது போதையிலும், காரணமின்றியும் வீதிகளில் நடமாடும் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்கள் 18 வயதையுடையவர்களாகவும் மாணவர்களாகவும் அடையாளம் காணப்படுகின்றமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

யாழ்.குடாநாட்டில் மற்றுமொரு சமூக சீரழிவாக, சிறுவர் துஷ்பிரயோகம் காணப் படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதும் சிக்கலான ஒன்றாக மாறியுள்ளது. வயது குறைந்த பெண் பிள்ளைகளுக்கான பாதுகாப்பினை வழங்க வேண்டிய கடமை முதலில் பெற்றோருக்கே உள்ளது. அவர்களை கண்காணிப்பது மட்டுமல்லாது அறிவுரைகளையும் வழங்கி வழிகாட்ட வேண்டியது முதலில் பெற்றோர்களே.

தற்போது யாழ்ப்பாணத்தில் சிறு பிள்ளைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. ஆனால், இவை பலவந்தமாக இடம்பெறுவதில்லை சிறுமிகளின் சம்மதத்துடனேயே இடம்பெறுகின்றது என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்...

விளம்பரம்™
VLAMBARAM
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



3 Bedrooms, 3 W Room
pen Concept Floor Plan, Main Floor Laundry With Garage Access



4 Bedrooms, 3 W Room
Main Floor Laundry W/ Garage Access, Open Living Room/Dining Room



3+0 Bedrooms, 2 W Room
3 Car Garage, No Businesses Or Out Buildings



3 Bedrooms, 1 W Room
Custom Deck Overlooking Backyard With Custom Landscaping



3 Bedrooms, 3 W Room
Oak Staircase,S/S Applns, Gas Stove,Jet Tub In Ensuite



4 Bedrooms, 4 W Room
Beautiful Detached Home W/ Finished Bsmt



4 Bedrooms, 4 W Room
Walk In Closet With Soaker Tub + Shower



4 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement. Newer Garage Door



3+2 Bedrooms, 4 W Room
New Paint,Open Concept Living & Diningroom



3 Bedrooms, 3 W Room
Hardwood Flooring,Main Floor Den,Laundry With Garage Access



4+3 Bedrooms, 5 W Room
Professionally Finished Basement Apartment



4+1 Bedrooms, 3 W Room
4 Spacious Bedrooms With Large Master Ensuite



3 Bedrooms, 3 W Room
Wrought Iron Fencing Around Pool, Extensive Decking,Hot Tub



4+3 Bedrooms, 5 W Room
Escape To The Way The Cottage Used To Be



5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings, Theater Room Projector & Movie Chairs

KZG 647-200-5833



Sell your home **faster** and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# ஜெயலலிதாவின் ஐந்தாண்டு ஆட்சி

## ஒரு மதிப்பீடு - 4

பிரின்ஸ் கஜேந்திரபாபு - கல்வியாளர்

அதிமுக அரசு, 2011 தேர்தலில் அதிக வாக்குகள் வாங்கி, 150 எம்எல்ஏக்களைக் கொண்டு ஆட்சிக்கு வந்தது. மக்கள் இவர்கள் மீது அந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால், மக்களுடைய இந்த நம்பிக்கையை பதவியேற்ற உடனேயே இந்த அரசு இழந்துவிட்டது. காரணம், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, ஆட்சியை நடத்துவதற்குப் பதிலாக, முந்தையை ஆட்சியை பழி வாங்கும் உணர்ச்சியோடுதான் முதல்வர் ஜெயலலிதா செயல்பட்டார். ஒரு அரசு புதியதாக ஆட்சிக்கு வந்த உடன் ஏற்கனவே இருந்த ஆட்சியின் நல்ல திட்டங்களை அதன் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் ஜெயலலிதா, பல நல்ல திட்டங்களை முந்தைய அரசு அறிமுகப்படுத்தியது என்கிற ஒரே காரணத்துக்காக நிறுத்தினார் அல்லது சிதைத்தார்.

இந்த ஐந்தாண்டு காலத்தில் நாங்கள் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்திருக்கிறோம் என்று அலட்டிக்கொள்ளும் இந்த அரசு அடிப்படையில் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டு வந்துவிடவில்லை. மாறாக முதல் அமைச்சரவையிலேயே இரண்டாவது தீர்மானமாக சமச்சீர் கல்வித்



திட்டத்தை ரத்து செய்தது. இதை விசாரித்த உயர்நீதிமன்றம் இந்தத் திட்டத்தை ரத்து செய்தது தவறு என்று எடுத்துரைத்தும்கூட தமிழக அரசானது, உச்சநீதிமன்றத்தை அணுகியது. இதன் விளைவு நீதிமன்ற வழக்குகள் முடியும் வரை அதாவது மூன்று மாதங்களாக நாம் எந்தப் பாடத்திட்டத்தை படிக்கப் போகிறோம் என்றுகூட தெரியாமல் மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக எந்தஒரு பாடத்திட்டங்களுமே இல்லாமல் மாணவர்கள் மூன்று மாதங்கள் பள்ளிக்குச் சென்றது தமிழ்நாட்டில் மட்டுமே நடந்த நிகழ்வாகும்.

இதுபோல், 2012 ஆம் ஆண்டு நடந்த ஆசிரியர் தகுதித் தேர்வு மதிப்பெண் தளர்வு இல்லாமல் நடந்தது. ஆசிரியர் தகுதித்தேர்வில் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்குக் கொடுக்கக்கூடிய மதிப்பெண் தளர்வு கொடுக்கப்படவில்லை. அதன்பிறகு ஆதி திராவிடர் ஆணையம் தமிழ்நாடு அரசிற்கு ஒரு கடிதம் அனுப்பியது. சென்னை நீதி மன்றத்திலும் மதிப்பெண் தளர்வு கொடுப்பது செல்லும் என்று தீர்ப்பாகியது. இதனால், 2013இல் 5 சதவீத மதிப்பெண் தளர்வோடு ஆசிரியர் தகுதித் தேர்வை நடத்த வேண்டிய நிர்பந்தம் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டது. அதன்பின்னர், 2014 மற்றும் 2015 ஆகிய இரண்டு ஆண்டும் ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெறவில்லை. இனி 2016 லும் நடைபெற வாய்ப்பில்லை. ஒரு ஆண்டிற்கு ஒருமுறையாவது ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்த வேண்டுமென்று ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சில் அறிவுறுத்துகிறது. ஆனால், இந்த ஆட்சியில் எல்லாமே தலைகீழாகத்தான் நடக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை நடைபெற்ற தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு போய் விட்டார்கள். ஆனால், இப்போது தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் இனி தேர்வு நடத்தினால்தான் அரசு வேலைக்குப் போக வாய்ப்பிருக்கிறது.

தனியார் பள்ளிகளில் 25 சதவீத மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆனால், அது பற்றி என்றைக்காவது இந்த அரசு ஆராய்ந்து பார்த்திருக்கிறதா? பல தனியார் பள்ளி நிர்வாகங்கள் ஆரம்பத்தில் இட ஒதுக்கீடோடு மாணவர்களை சேர்த்துவிட்டு பிறகு பணம் வாங்கியிருக்கிறார்கள். இதனைக் கண்டித்து போராட்டம் நடத்திய பிறகு அரசானது தனியார் பள்ளிகளுக்கு வேண்டுகோள் வைக்கிறது. நீங்கள் பெற்றோர்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்துவிட்டு அவர்களிடம் கையெழுத்து வாங்கி விடுங்கள் என்று. இந்தச் செயல் தனியார் பள்ளிகளின் விதிமீறலை அரசு ஊக்கப்படுத்துவதாக இருக்கிறது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...

ENBRIDGE RIDE TO CONQUER CANCER benefiting PRINCESS MARGARET CANCER CENTRE

**LOCAL RESIDENT SETS FUNDRAISING GOAL FOR AN EPIC CYCLING EVENT**

***The Ride to Conquer Cancer celebrates the ninth anniversary of record-setting fundraising for cancer research and care***

**Netharsan of Scarborough** is gearing up for the ninth annual **Enbridge Ride to Conquer Cancer benefiting Princess Margaret Cancer Centre.** The Ride brings together communities of riders, survivors and their supporters for one common goal: to conquer cancer in this lifetime. Riders will travel between Toronto and Niagara over two-days, June 11-12, 2016. Funds raised from this epic event will support Personalized Cancer Medicine, including research, treatment advances and care at Princess Margaret Cancer Centre.

With 45% of Canadian men and 42% of Canadian women developing cancer in their lifetime, Netharsan rightly viewed The Enbridge Ride to Conquer Cancer as a call to action and has set a goal of raising **$2500.00** for the 2016 event. This is an achievable goal; however it requires support in order for **Netharsan** to achieve **his** fundraising. Every rider must raise a minimum of $2,500 in order to participate and for The Ride to continue making crucial impacts for cancer research and care at Princess Margaret Cancer Centre.

**Netharsan** decided to register for the 2016 Ride because Cancer does not wait for spring or summer or fall. For those struggling through it or who have lost loved ones or who are caregivers and researchers, it's year round. Despite so many advances, there are still so many heartbreaking losses.

Each year, the Ride is one way of putting our collective energy toward conquering cancer. Through our support of the ride, we enable the staff at the Princess Margaret to keep striving for excellence.

Please consider increasing your support and helping us to make this 9th ride the best one yet.

This is the ninth annual Ride to Conquer Cancer in Ontario. To date, the event has helped raise over $138 million for Princes Margaret Cancer Centre. Funds raised by The Ride are put to use immediately supporting groundbreaking research programs and platforms at The Princess Margaret.

To help **Netharsan** reach his goal of $2500.00, or to join him on this epic journey, visit www.conquercancer.ca or call 877.699.BIKE. Simply enter **[Name]** Netharsan Vimalanderan **or [Participant ID Number]** 604518-6, and make your contribution to this important cause.

###

**Media contact:**
Leviana Coccia
Communications Manager
416.577.9255
lcoccia@conquercancer.ca

# GTA இல் தனி வீடுகளின் விலை ஒரு மில்லியனை தாண்டியது!

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் முதல் தடவையாக தனி வீடுகளின் விலை ஒரு மில்லியன் டொலர் என்ற பெரிய இலக்கை தாண்டியுள்ளது. இதனால் தனி வீடுகள் வாங்குபவர்களின் நிலைமை மிகவும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்து மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் ஏற்பட்ட 21% விலை அதிகரிப்பு, தனி வீடுகளின் சராசரி விலையை $1.05 Million ஆக அதிகரித்துள்ளது. (அடுக்குமாடி மனைகளின் ரொறொன்ரோ விலை அதிகரிப்பு 8.1%) போதியளவு தனி வீடுகள் சந்தையில் காணப்படாததே இதற்கு காரணமாகும் என Building industry and land development இன் CEO Bryan Tuckey தெரிவித்துள்ளார். ஏறக்குறைய 36,000 புதிய குடும்பங்கள் அல்லது தனிமனிதர்கள் GTA பாகத்திற்கு வருடா வருடம் வருவதால் வீடுகளின் நிலைமை நெருக்கடியிலேயே காணப்படுகின்றது. 10 வருடங்களிற்கு முன்பாக ஏறக்குறைய 15,000 புதிய வீடுகள் நிர்மாணம் செய்யப்பட்டதிலிருந்து இப்பொழுது (2015) 3,036 புதிய வீடுகளே நிர்மாணிக்கப்பட்டது. இதுவும் மற்றொரு முக்கிய காரணமாகும். இதே காலத்தில் அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஏறக்குறைய 18,280 அடுக்குமாடி மனைகள் சந்தையில் உள்ளன. 2008 இல் அடுக்குமாடி மனைகளினதும், உயரம் குறைந்த நிலத்துடனான வீடுகளினதும் சராசரி விலை வித்தியாசம் $100,000 ஆகக் காணப்பட்டது. ஆனால் இன்று $400,000 ஆகக் காணப்படுகின்றது புதிதாக நிர்மாணம் செய்யப்படும் வீடு, மனைகளின் கட்டிட செலவில் ஏறக்குறைய 20% ஆனவை அரச செலவுகளாக கொடுக்கப்படுகின்றது. இந்த அரசு மானியம் பெறும் தொகை வருடா வருடம் அதிகரித்தே செல்கின்றது. இது ஒரு பெரிய பகுதியாகக் காணப்படுகின்றது. GTA பகுதியில் 2004 இலிருந்து இன்றுவரை 143 இற்கும் 257 வரையான வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் 463

பொதுவாக இந்த அரசுக்கு நிர்மாண நிறுவனங்களால் செய்யும் கொடுப்பனவு, வீடு, மனை வாங்குபவர்களிற்கே மாற்றப்படுகின்றது. பணம்தேடும் அரசாங்கங்கள், இந்த தொகையை தொடர்ந்து அதிகரிக்கும் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்கமுடியாது. மக்கள் பொதுவாக நகரத்துடன் அண்டிய பகுதியிலேயே வாழவிரும்புவதால், இந்தவிலை ஏற்றம் தவிர்க்க முடியாமல் போகின்றது. ஆனால் அரசின் அறிக்கைகளின்படி எதிர்வரும் 15 வருடங்களிற்கு நிர்மாணம் செய்யக்கூடிய நிலம் காணப்படுவதாக அறியப்படுகின்றது. ஆனால் இவை நகரை விட்டு வெளிப்பகுதியிலேயே காணப்படுகின்றது. தகுந்த போக்குவரத்து சேவையை அரசு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc.** Brokerage.*

5215 Finch Ave, East. #203 Toronto, On. 416 315 9397

* independently owned and operated



Raja Mahendran, P Eng

**HOTELS FOR SALE**

Prominent Hotels Available For Sale in & around GTA. Price starting from $4 million

**Sale /Lease**

GTA Square
Middlefield & Finch
Commercial /office space
Size Upto 1000 Sq. Ft.
2nd Floor, 2- Lockers
1-Underground Parking
Available immediately

**Retail space**

Middlefield &Finch
Retail space
Size Upto 430 Sq. Ft.
Main Floor, corner unit
1-Underground Parking
Price Reduced to $159K
( from $169K)

**BAKERY FOR RENT/SALE**

Well Established Bakery in East Scarborough
**Close to:** 10 Highrise condos/Appartments, Schools, TTC,Community Centre,Library and Church.
**Included**:Bakery Equipments,Coolers & other accessories
Availabe Immediately For Rent or Sale

# ஜெயலலிதாவின்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசு வேலைகள் அனைத்துமே, இந்த ஆட்சியில், பணம் பெற்றுக்கொண்டுதான் வழங்கப்பட்டது. புதிதாக போடும் பணிகளுக்கு பணம் வாங்கியது ஒரு பக்கம் இருக்க, பணம் வாங்குவதற்காகவே, அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளில், ஏற்கெனவே வேலையில் இருக்கும் தகுதியுடைய ஒருவரை நீக்கிவிட்டு, அந்த இடத்துக்கு புதிதாக தகுதியில்லாத ஒருவரை பணத்திற்காக சேர்த்துக் கொள்ளுவதும் நடந்தது. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இப்படியென்றால் பல அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர்களே இல்லாமல் படிக்கிறார்கள் மாணவர்கள்.

இப்படி கல்வித்துறைக்குள் மட்டும் இந்த ஆட்சி மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் உள்ளன. இந்தத் துறையில் இந்த அரசின் சாதனை என்று சொல்ல வேண்டுமானால், அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினி கொடுத்திருப்பதை சொல்லலாம். கல்வித் துறையில் இலவசங்கள் என்பது ஒரு அரசானது தன்னுடைய மக்களுக்கு செய்ய வேண்டிய கடமையாகவும் மக்கள் அதைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், இலவசங்களைக் கொடுத்துவிட்டு இது எங்கள் ஆட்சியின் சாதனை என்று சொல்லிக்கொள்கிறார்கள். தன்னுடைய கடமையை சாதனைகளாக சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டதைத் தவிர இந்த ஆட்சி வேறெந்த சாதனையையும் பெரிதாக செய்துவிடவில்லை.

# ஜெயலலிதாவை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்ற சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனம் எழுந்த பிறகு வந்தாங்க. தனக்கு ஓட்டுப்போட்ட மக்கள் எந்த நிலைமையில இருக்காங்க என்பதைக்கூட உணராமல், வீடுகளையும் உடமைகளையும் இழந்து துயரத்திலிருந்த மக்களைப் பார்த்து, “எனதருமை வாக்காளப் பெரு மக்களே” என்று வாக்கு சேகரிக்க ஆரம்பிச்சாங்க. இப்படிப்பட்டவருக்கு எப்படி மக்கள் பிரச்சனைகள் பற்றிப் புரியப் போகிறது?



கடந்த ஐந்தாண்டு ஜெயலலிதாவின் ஆட்சி பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால் உயிரற்ற அரசாங்கம் என்றுதான் சொல்லவேண்டும். செயல்படாத முதல்வர் என்று ஜெயலலிதா மீது மக்கள் மிகப்பெரிய அதிருப்தியில இருக்காங்க. அந்த அதிருப்தியை தொகுதிக்குள் எனக்கு கிடைக்கும் பயங்கர வரவேற்பிலேயே உணர்கிறேன். தளபதியும் ஆர்.கே நகர் தொகுதியிலிருந்துதான் தனது பிரச்சாரத்தைத் தொடங்கியிருக்கிறார். அது எனக்கு மிகப் பெரிய பலம். இன்னொரு பலம், திமுக தேர்தல் அறிக்கை.

**ஆனால், ஆட்சியில் இருந்தபோது மதுவிலக்கை அமல்படுத்தாமல் தற்போது தேர்தல் நேரத்தில் மட்டும் ஓட்டுக்காக அறிவித்திருப்பதாக திமுக தேர்தல் அறிக்கையும் விமர்சனத்துக்கு உள்ளாகி யிருக்கிறதே?**

அப்போதிருந்த சூழ்நிலையைவிட இப்போதுதான் அதிக உயிரிழப்புகளும் விபத்துகளும் ஏற்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, தெருவுக்குத் தெரு டாஸ்மாக் கடைகளை திறந்ததால் பள்ளி மாணவர்கள், மாணவிகள், குழந்தைகள் முதற் கொண்டு மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். இளைஞர்கள் தெருக்களில் ஆங்காங்கே போதையில் விழுந்துக் கிடக்கிறார்கள். இதற்கு முழுக் காரணமும் ஜெயலலிதாதான். ஒவ்வொரு வருடமும் இவ்வளவு வருமானம் வரவேண்டும் என்று டார்கெட் பிக்ஸ் பண்ணி மக்களிடம் பணத்தை சுரண்டினார். இப்படியே சென்றால் தமிழகம் மேலும் மேலும் சீரழிந்து போய் விடும் என்பதால்தான், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று தலைவர் கூறியிருக்கிறார்.

**- சிவதாணு -**

**இன்னொரு பக்கம் மக்கள் நலக் கூட்டணி அணி திமுகவின் ஓட்டுகளை பிரித்துவிடும் என்கிறார்களே?**

என்னைப் பொறுத்தவரையில் திமுகவின் தேர்தல் அறிக்கை பக்கபலமாக இருப்பதால் எந்த அணியாலும் திமுகவின் ஓட்டுகளை பிரிக்க முடியாது. அதிமுகவுக்கு மாற்றாக மக்கள் திமுகவைத்தான் பார்க்கிறார்கள்.

**சற்குணபாண்டியன் மருமகள் என்பதால்தான் சீட் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் வாரிசு அரசியல்தான் என்று உங்களைப் பற்றி விமர்சிக்கிறார்களே?**

என் அத்தை சற்குணப்பாண்டியனைப் பார்த்துதான் நான் அரசியலுக்கு வந்தேன். மறுக்கவில்லை. ஆனால், அதன்பிறகு என் அத்தை மற்றும் தலைவர் கலைஞர் போன்ற மூத்த தலைவர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும் உழைப்பையும் பார்த்து, இன்ஸ்பிரேஷன் ஆகி, நாமும் நம்மால் முடிந்த உதவிகளை இந்த சமூகத்துக்கு செய்யணும் என்று கடந்த பத்து வருடங்களாக செயல்பட்டு வருகிறேன். திமுக நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு முன்பே வழக்கறிஞராக பல்வேறு குடும்பநல வழக்குகளில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஃபீஸ் வாங்காமலேயே வாதாடி நீதியை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். ஆர்.கே. நகர் தொகுதியில் வந்து என்னைப் பற்றி விசாரியுங்கள். கடந்த 10 ஆண்டுகளாக என்னை அவர்கள் நன்கு அறிவார்கள். மருத்துவ முகாம்கள், வெள்ளப் பாதிப்பின்போது செய்த சேவைகள் போன்ற ஆர்.கே. நகர் தொகுதி மக்களுக்காக நான் செய்துள்ள நற்பணிகள் மற்றும் அத்தொகுதி மக்கள் மத்தியில் எனக்குள்ள செல்வாக்கு ஆகியவற்றைப் பார்த்துதான் எனக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**தலைவர்களை எதிர்த்து போட்டியிடுபவர்களை ‘பலிகடா’ வேட்பாளர் என்கிறார்களே? நீங்கள் அப்படி உணர்கிறீர்களா?**

இதை நான் நிச்சயம் மறுக்கிறேன். ஜெயலலிதாவுக்கு எதிராக என்னை நிறுத்தினாலே போதும் என்று எங்கள் தலைமை முடிவெடுத்திருக்கிறது. தொகுதி மக்களுக்கு நல்லது செய்ய ஒரு மிகப்பெரிய வாய்ப்பை கொடுத்திருக்கிறது. அந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக்கொள்வேன்.

## தமிழ்நாடு தேர்தல்

**மே 16, 2016 இல் நடைபெறவுள்ள தமிழக தேர்தலில் 100 வயதைக் கடந்து 7,627 பேர் வாக்காளர்களாக உள்ளனர்.**

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

31 குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை மைக் டஃவி தனது சொந்த பிரயாணத்திற்கான செலவுகளை தொழில் சம்பந்தமான பிரயாணங்களுக்கான செலவுகள் என மீளப்பெற்றுள்ளார் என்பதாகும். மைக் டஃவி யின் மகள் குடும்பத்துடன் பிரிட்டிஸ் கொலம்பியாவில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு பிள்ளை பிறந்த போது மைக் டஃவி பேரப்பிள்ளையை பார்க்க ஒட்டாவாவில் இருந்து சென்றிருந்தார். அச்செலவினங்கள் எல்லாம் அரச அலுவல்களுக்கு சென்றதாக காட்டப்பட்டிருந்தன.

இதுபற்றி கூறிய நீதிபதி மைக் டஃவி யின் பிரயாணங்கள் அரச அலுவல்களுடன் தொடர்புடையதாகவே இருந்தன என்றும் அப்பிரயாணங்களின் போது தனது சொந்த தேவைகளையும் பூர்த்தி செய்திருந்தார் என்றும் கூறினார். இதற்கு செனற் சட்ட மூலத்தில் இடம் இருப்பதையும் சுட்டிக் காட்டினார். அதாவது மைக் டஃவி கனேடிய மேற்சபையின் தெளிவற்ற விதிகள் மூலம் பயனடைந்துள்ளாரே தவிர அவர் திட்டமிட்டு எந்த மோசடியையோ ஊழலையோ செய்யவில்லை என்று தெளிவாக தனது தீர்ப்பில் நீதிபதி தெரிவித்திருந்தார்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் முன்னாள் தலைமை அதிகாரியான நைஜெல் றைட் (Nigel Wright) இடம் இருந்து செனட்டர் மைக் டஃவி பெற்றதாக கூறப்பட்ட $90,172 பெறுமதியான காசோலை பற்றி கூறிய நீதிபதி மிகவும் கடுமையான வார்த்தைகளால் முன்னாள் பிரதமர் அலுவலகத்தை இச்செயலுக்காக குற்றம் சாட்டினார்.

மைக் டஃவி யின் செலவினங்கள் தவறானவை என பொதுமக்களிடம் காட்டுவதற்காகவே மைக் டஃவியை இந்த காசோலையை பெறுமாறு வற்புறுத்தப் பட்டார் என்று கூறிய நீதிபதி முன்னாள் பிரதமரின் அலுவலகர்களின் நடவடிக்கைகளே பொதுமக்களை ஏமாற்ற திட்டமிட்டு செய்த மோசடியாகவும் ஊழலாகவும் இருந்தனவே தவிர மைக் டஃவியின் நடவடிக்கைகள் அல்ல என்றார்.

முன்னாள் பிரதமரின் அலுவலகர்கள் மைக் டஃவியை பலவிதங்களில் பயமுறுத்தியும், உரத்து சத்தமிட்டும் நிலத்தில் உதைந்தும் (Dragged kicking and screaming) அந்த காசோலையை பெற்று அவர் தனக்கு சரியென நினைத்து சமர்ப்பித்து பெற்ற பணத்தை மீளக் கட்டும்படி மிரட்டப்பட்டார். இதேமாதிரி ஹொலிவூட்டால் கூட ஒரு திரைக்கதை தயாரிக்கமுடியுமா? என நீதிபதி தனது தீர்ப்பில் கேள்வி கேட்டிருந்தார்.

இதுபற்றி கருத்து தெரிவித்த முன்னாள் பழமைவாதக்கட்சியின் மேற்சபை உறுப்பினர்களின் தலைவி மாஜரி லீபிறட்டன் (Marjory LeBreton) இந்த நீதிபதியின் தீர்ப்பை அடுத்து கனேடியர்கள் முன்னாள் பிரதம அலுவலகர்கள் எல்லோரையும் தவறானவர்கள் என நினைக்கக்கூடாது என்றார். முன்னாள் கனேடிய பிரதமரின் அலுவலகத்தில் பலர் வேலை செய்தனர். ஒருசிலரின் தவறான நடவடிக்கையால் எல்லோரையுமே தவறானவர்கள் என தீர்மானிக்கக்கூடாது என்றார்.

இத்தீர்ப்பினை அடுத்து முன்னாள் பழைமைவாதக்கட்சி அரசாங்கத்தால் பொதுமக்களின் வரிப்பணத்தை தவறாகப் பயன்படுத்தினார்கள் என குற்றஞ்சாட்டப் பட்டுள்ள ஏனைய மேற்சபை உறுப்பினர்கள் மீது அரசாங்கம் வழக்குத்தொடருமா என கேள்வி எழுந்துள்ளது.

**கனேடிய நாடாளுமன்ற மேற்சபையில் 105 ஆசனங்கள் உண்டு. இதற்கு உறுப்பினர்களை கனேடிய ஆளுனர் கனேடிய பிரதமரின் பரிந்துரையில் இருந்து தெரிவு செய்து நியமிப்பார். மேற்சபை உறுப்பினராக நியமிக்கப்படுபவர்கள் 75 வயதுவரை அப்பதவியை வகிக்கலாம். இம்மேற்சபையில் தற்போது 42 பழமைவாதக்கட்சி யினரும் 24 லிபரல் கட்சியை சார்ந்த சுயேட்சை உறுப்பினர்களும் 21 கட்சி சார்பற்ற சுயேட்சை உறுப்பினர்களுமாக 87 உறுப்பினர்கள் இருக்கின்றனர். மிகுதி 18 இடங்களும் வெற்றிடமாக உள்ளன.**

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

# காலத்தால் அழியாது இன்றும் பயன் தரும் பழமொழிகள்

நம் முன்னோர்களின் அனுபவங்களின் வெளிப்பாடாக அமைவன பழமொழிகள். இவற்றை செவிவழியாக நீண்டகாலமாக மக்கள் அறிந்திருந்தனர். இவற்றின் பயன்கருதி இப்பழமொழிகள் ஒரு கால கட்டத்தில் அறிஞர்களால் தொகுக்கப் பட்டது. முற்காலத்தில் பொருத்தமான வேளைகளில் மூத்தோரால் சர்வசாதாரண மாக இப்பழமொழிகள் கையாளப்பட்டன. என் அனுபவத்தின் மூலம் இப்பழமொழிகள் பொருத்தமான சூழ்நிலைகளில் மிகவும் பயன்பட்டுள்ளமையை உணர்ந்துள்ளேன். அவ்வகையில் என்னைக்கவர்ந்த பழமொழி களில் சிலவற்றைத் தொகுத்துள்ளேன். சொற்சுருக்கமும் பொருட்செறிவும் உள்ள இப்பழமொழிகளை அறிந்து கொள்வது பயன் தரும்.

வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் உற்ற துணையாக அமைவன இப்பழமொழிகள் எனலாம். துன்பப்படும் ஒருவரைப்பார்த்து ஆறுதல் கூறும் அமுதமொழியாக அமையும் பழமொழி “இலையும் பழுப்பும் எங்கும் உண்டு” என்பதாகும். இதே பொருளைத் தரும் இன்னொரு பழமொழி. “வீட்டுக்கு வீடு வாசற்படி” என்பதாகும்

மனித வாழ்வு மேம்பட மனம் அமைதி பெறவேண்டும். அமைதியான மனதில்தான் மகிழ்ச்சி குடி இருக்கும். அப்போதுதான் முகத்தில் உண்மையான மலர்ச்சி வெளிப் படும். மனிதர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார் களா? இல்லையா? என்பதை அவர்கள் முகமே காட்டிக்கொடுத்துவிடும். இக்கருத் தின் வெளிப்பாடாக “அகத்தின் அழகு முகத்திற்தெரியும்” என்னும் பழமொழி அமைகிறது.

கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்க்கை சிறப்படைய கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு எந்தளவுக்கு அன்பு உடையவர் களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு குடும்ப வாழ்க்கை வெகு சிறப்பாக அமையும். இக்குடும்ப அமைப்பில் கணவ- னின் பங்களிப்பைக்கருத்திற்கொண்டு கணவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அமையும் பழமொழி ‘கணவனே கண்கண்ட தெய்வம்” என்பதாகும்.

அதேபோலவே மனைவியின் முக்கியதுவத் தை வெளிப்படுத்தும் பழமொழி ‘தாய்க்குப் பின் தாரம்’ என்பதாகும். குழந்தைப் பருவத்தில் தாய் எவ்வளவு முக்கியமோ அதேபோலவே திருமண வயதில் மனைவி முக்கிய இடம் பெறுகின்றார்.

எமது வாழ்வில் நட்பு மிக உன்னத இடத்தைப் பிடிக்கின்றது. “அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்” என்ற பழமொழி நல்ல நண்பனை இனம் கண்டு பழக உதவுகிறது. நாம் நல்லவர்களுடன் சேரும்போது அவர்களது நல்ல பண்புகளும் எம்மை வந்து சேரும். இதனால் நாம் மேலும் நல்லவர்கள் ஆவோம். “பூவுடன் சேர்ந்த நாரும் மணம்பெறும்” என்பது அந்தப்பழமொழி ஆகும்.

“ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது” என்னும் பழமொழி வாழ்க்கை அனுபவத்தின் அவசி யம் பற்றிக் குறிப்பிடுகிறது. வெறும் புத்தகப்படிப்பு மட்டும் வாழ்க்கைக்கு பயன்படாது. நாம் பெறும் பல்வேறுவகை யான அனுபவங்களே வாழ்க்கையை சிறப்பாகக்கொண்டு செல்ல உதவுகின்றன.

துணிவே துணையானால் ஒருவர் வாழ்க்கையில் பல காரியங்களைச்சாதிக்க லாம். சிலர் எதற்கும் காரணம் இல்லாமல் பயப்படுவார்கள். அவர்கள் அப்படிப்பயப்படத் தேவை இல்லை என விளக்கம் தருவதாக... ‘‘மருண்டவன் கண்ணுக்கு இருண்டது எல்லாம் பேய்” என்பது அமைகிறது.

நாம் வஞ்சகர்களுடனும் நல்லவர்களுடனும் சேர்ந்து வாழ்கின்றோம். பிறர் செய்யும் வஞ்சகத்தனங்களை விழிப்போடு இருந்து முறியடிக்க வேண்டிய தேவை எம் வாழ்க்கையில் ஏற்படுகின்றது. இக்கருத்தை "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம்" என்னும் பழமொழி வெளிப்படுத்துகின்றது.

நாம் பலசாலியாக இருந்தாலும் சிலவேளை கவனயீனமாக நடப்பது வழக்கம். இவ்வாறான அலட்சியப்போக்கு தவிர்க்கப் படவேண்டும். இல்லையாயின் எந்தப்பெரிய வரும் தவறு விட்டுவிடுவார். “ஆனைக்கும் அடி சறுக்கும்” என்பதனை இவ்விடத்தில் நினைத்துப்பார்க்கலாம்.

இளமையில் கற்பதும் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக்கொள்வதும் இலகு என்பதற்கு பல பழமொழிகள் உள்ளன ‘‘இளமையிற்கல்வி சிலையில் எழுத்து என்பது கல்வியைப்பற்றியது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" ‘‘தொட்டிலிற்பழக்கம் சுடுகாடுவரை” என்பவை பழக்கவழக்கங்கள் பற்றியவை யாக அமைகின்றன. பிறவிக்குணம் மாறாது என்பர். எனவே பிறரின் ஒவ்வாத சில பண்புகளை மாற்ற முடியாது. “கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா? என்பதன் மூலம் அப்படிப்பட்டவர்களை இனம்கண்டு புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதற்கு உதவுகிறது.

**- ரஞ்சி ஸ்ரீகதிர்காமநாதன் -**

தீமை செய்பவன் துன்பப்படுவான் என்பதை பேச்சு மொழியில் “அடாது செய்தவன் படாதுபடுவான்” என்று கூறப்பட்டுள்ளது.

நாம் முற்றும் அறிந்தவர்கள் என்று அகங்காரம் கொண்டு இருப்பவர்கள் "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதனை விளங்கி கொண்டால் நன்மை பெறுவர்.

வாழ்க்கையில் பொறுமை அவசியம், அவசரப்பட்டால் நிதானத்தை இழக்க நேரும் பொறுமையாக இருப்பதற்கு மனப்பக்குவம் தேவை. அந்த மனப்பக்குவத்தோடு ஒரு காரி யத்தைப் பதட்டப்படாமல் செய்தால் அது நிறைவாக முடியும். "பதறாத காரியம் சிதறாது" என்பது இதற்குப்பொருத்தமாக அமைகிறது.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்



CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7


# GTA இல்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைத்தால் மக்கள் வெளியே சென்றும் வாழ்வார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

**சில தகவல்கள்**

- ஏப்ரல் 09, 2016 இன் கணக்கின்படி ஒன்ராரியோவில் உள்ள அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 1.3 மில்லியன்
- ரொறொன்ரோவில் வெளிநாட்டவர் வாங்கிய அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 2014 இல் 3500 மனைகள் 2015 இல் 7000 மனைகள் 2016 இல் இதனைவிட அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஏப்ரல் 13, 2016 இல் கனேடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.5% ஆகவே விடப்பட்டுள்ளது.
- அடுத்த (2017) வருடத்தின் இறுதிப்பகுதியில் வட்டிவீதம் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- தொழில் இல்லாமல் இருப்பவர்கள் 7.3% ஆகக்காணப்படுகின்றது.

**வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு 2015 இல் வந்த பிரயாணிகள்.**

| நாடு | பிரயாணிகள் எண்ணிக்கை |
|---|---|
| USA | 12,474,500 |
| UK | 715,548 |
| France | 500,502 |
| German | 328,870 |
| Australia | 286,906 |
| Japan | 275,027 |
| Mexico | 196,408 |
| India | 190,565 |
| South Korea | 188,585 |
| Brazil | 112,268 |

இதனைவிட உலகின் ஏறக்குறைய சகல நாடுகளிலிருந்தும் மக்கள் கனடாவிற்கு வருவது சாதாரணமாகக் காணப்படுகின்றது. இதன் எண்ணிக்கை எதிர்காலங்களில் அதிகரிக்கும் என Tourist board எதிர்வு கூறுகின்றது. கனேடிய பொருளாதாரத்திற்கு இது உதவும் என எதிர்பார்க்கலாம். அத்துடன் இதனையே கனேடிய அரசும் விரும்புகிறது.

# இனவாதிகளிடமும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு முஸ்லிம் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார். தான் உள்ளிட்ட இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும் இந்த யோசனைக்கு இணங்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு யோசனைக்கு தெற்கில் தோன்றியுள்ள எதிர்ப்புகளும், தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம்களின் ஆதரவின்மையும், தமிழ் தலைவர்கள் மத்தியில் காணப்படும் கருத்தொற்றுமையற்ற தன்மையும் நிலவுகின்ற போது, இவ்வருட இறுதிக்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எட்டப்படும் என்கின்ற தலைவர் சம்பந்தனின் உறுதிமொழி நிறைவேறுமா என்கின்ற கேள்வியே தற்போது பலமாக எழுந்துள்ளது.

# சமூகத்தில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிபர் தெரிவிக்கின்றார். தற்போதைய சிறு பிள்ளைகள் பாலியல் சார்ந்த விடயங்களில் விழிப்பற்று இருக்கின்றனர். இதற்கு பொலிஸார் என்ன செய்ய முடியும்? பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் செயற்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும். சில பிள்ளைகள் தாம் பருவமடைந்ததைக் கூட அறியாமல் இருக்கின்றனர். இவ்வாறு பாதிக்கப்படும் பெண் பிள்ளைகளின் முறைப்பாட்டை பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது என அவர் கூறுகின்றார். இவ்வாறான சம்பவங்கள் கூடுதலாக கிராமப்புறங்களில் இடம் பெறுகின்றன.

இவை யாவுமே சமூகத்தில் கவலைக்குரிய விடயங்களாகவே அமைந்துள்ளன. தங்கள் பிள்ளைகள் குறித்து பெற்றோர்களே முதலில் கவனமெடுக்க வேண்டும். அடுத்த கட்டமாக பாடசாலைகளின் ஆசிரியர்கள் கவனமெடுத்தல் அவசியமானது. பாட நூல்களை கற்பித்தலுடன் மட்டும் நின்று விடாது விழிப்புணர்வு கருத்துக்களையும், அறிவுரைகளையும், உளவளத்தை சீராக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வது சிறந்ததாக அமையும்.

வடக்கில்- குறிப்பாக யாழ். குடாநாட்டில் இன்று அதிகரித்து வரும் இளைஞர் மத்தியிலான வன்முறைகளையும், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த ஒரு சமூக விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்வது உடனடித் தேவையாகவுள்ளது. சட்டத்தாலும், காவல்துறை நடவடிக்கையினாலும் மட்டும் இவற்றை தடுத்து நிறுத்த முடியாது.

# $1,000,000 விலையுள்ள ஆதனம் ஆடம்பர வீடல்ல!



ஒரு வீட்டின் விலை 5 வருடங்களிற்கு முன்பாக ஒரு மில்லியனை தாண்டும் போது அவற்றை ஆடம்பரவீடு (Luxury House) என அழைப்பது வழக்கம். இப்பொழுது ரொறொன்ரோ, வன்கூவர் பகுதிகளில் அனேகமான தனி வீடுகள் ஒரு மில்லியனை தாண்டியே விற்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் நாம் வாழும் பகுதிகளிற்கு (Neighbourhood) ஏற்ப ஆடம்பர வீட்டின் வரைவிலக்கணம் மாறுகின்றது. உதாரணமாக ரொறொன்ரோவில் மிகவும் மதிப்பு மிக்க பகுதிகளில் (most prestigious areaக்களில் தனி வீடுகளின் (Detached house) விலைகள் வித்தியாசமாகவும், 2 மில்லியனிற்கும் அதிகமாகவே காணப்படுகின்றது / விற்கப்படுகின்றது.


உதாரணமாக, Rosedale, - Moore Park பகுதிகளில் சராசரிவிலை $2.61 Million, Forest hill பகுதிகள் $2.62 மில்லியன், Bridlepath - Sunny brook - York Mills அடங்கலான பகுதிகளில் சராசரிவிலை 5.72 மில்லியனாகவும் காணப்படுகின்றது.

இதனால் ரொறொன்ரோவின் ஆடம்பர வீடு என்றதன் பதம் $1.8 மில்லியனை தாண்டிய வீடுகளையே குறிக்கின்றது. அத்துடன் வன்கூவர் பகுதியில் இந்த இலக்கு $4 மில்லியனாக கருதப்படுகின்றது.

$1,000,000 என்பது பெரிய இலக்கு. 1986 இல் உள்ள 1 மில்லியன் இப்பொழுதுள்ள 2 மில்லியனிற்கு சமமாக காணப்படுகின்றது. இதற்கு பணவீக்கமும் காரணமாகும்.

2015ஆம் ஆண்டில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) பகுதியில் 1 மில்லியனிற்கு மேலாக விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11,112 ஆகும். அத்துடன் வன்கூவரின் விலை ரொறொன்ரோவின் விலையை விட அதிகூடவாக உள்ளது. மார்ச் 2016 இல் ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் தனி வீடுகளின் சராசரி விலை $910,375 ஆகக் காணப்பட்டது. ஆனால் வன்கூவர் பெரும்பாகத்தில் இந்த பெறுமானம் $1.78 மில்லியனாகக் காணப்படுகின்றது. ஆதன ஆய்வாளர்களின் கணக்கீட்டின்படி, குறைந்த வட்டிவீதம், குறைந்தளவான ஆதனங்கள் சந்தையில் காணப்படுவது, புதிய வரவாளர்கள் போன்றன இந்த விலை அதிகரிப்பிற்கு காரணமாக கூறுகின்றார்கள். சீனாவில் இருந்து முதலீடு செய்பவர்களும் ஒரு காரணமாகவும் கூறப்படுகின்றது.

எனினும் மேலதிக ஆதனங்கள் சந்தைக்கு வராமல் இருப்பின் இந்த விலை அதிகரிப்பு ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கலாம். ஆனால் மேலே செல்லும் யாவும் கீழே வந்தேதான் சேரும். இது இயற்கை. எதற்கும் நிதானமும் கவனமும் தேவை.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நிருபிக்கப்பட்ட G7-500
# கணித வெற்றி நெறி

**For Gr. 7**

கடந்த **27** வருடத்திற்கும் மேலாக கணிதபாடம் கற்பித்தல் ஏற்பட்ட அனுபவத்தில், தரம் 11, 12இல் பயிலும் மாணவர்கள் மிக அவதிக்குட்படுவதைக் கண்காணிக்கக்கூடியதாக இருந்தது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்க்கவென்றே எமது முழு அனுபவங்களையும் திரட்டி May2015இல் மிகப்பெரிய கணித கல்வி நெறியொன்றான **G8-400** ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மிகச்சிறப்பான வெற்றிகிட்டியதோடு, மேலும் புதிய அதினுண்மையும் புலப்பட்டது. இப்புதிய அனுபவத்துடன் பல பெற்றோரின் வேண்டுதலினையும் செவிமடுத்ததில் இவ்வருடம் **G7-500** எனப்படும் புதிய கணித பாடத்திட்டம் தற்சமயம் தரம் 7இல் பயிலும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் முழுவிபரங்களை மாணவர்களும் பெற்றோர்களும் அறியும் பொருட்டு ஓர் சிறிய கணித அறிமுகதேர்வு நடைபெறவுள்ளது. ஆர்வமுடைய பெற்றோர்கள் பின்வரும் மின்அஞ்சல்மூலம் மாணவர் பெயர், பாடசாலை, தொலைபேசி இல., இவற்றுடன் முற்பதிவுசெய்யவும்.



அறிமுகத் தேர்வு: **May 21/2016**

பதிவுத் தேதி இறுதிநாள்: **May 16/2016**

மின் அஞ்சல் : **g7.500math@gmail.com**

## New classes for 2016 / 17

- For current Gr.7 **New** — G7-500 — starts: May 23/16
- For current Gr.8 **New** — G8-400 — starts: May 23/16
- For current Gr.10 — G11 & 12 — starts: May 1/16

Entire new program, Helps students score 90's and above in Function(G11) and AF(G12)

*University Level

- For current Gr.11 — G12-100AFCV — starts: May 15/16

(Advanced Function, Calculus &Vectors)

The most wanted program for Gr.11. If anyone is thinking of going into higher level University for a life science or Engineering program, You must consider this Program.

*University Level

மேலதிக தகவல்களுக்கு

**Info: 416-666-5515**

**MATH WORLD**
MOST ADVANCED TALENTED HELP





# கனேடிய வர்த்தக சம்மேளனத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு

கனேடிய வர்த்தக சம்மேளனத்தின் 25ஆவது ஆண்டு பூர்த்தியையொட்டி நடைபெறும் விழாவை முன்னிட்டு ஒரு ஊடகவியலாளர்கள் சந்திப்பு (23-04-2016) சனி மாலை 4:45க்கு ஸ்காபரோவில் அமைந்துள்ள ஸ்காபரோ கொன்வென்சன் மண்டபத்தில் ஏற்பாடு



செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் பின்னர் அதேமண்டபத்தில் இராப்போசன விருந்துடன் கூடிய நிகழ்வு ஒன்றும் நடைபெற்றது. ஊடகவியலாளர்கள் சந்திப்பில் முதலில் சில வணிக சாதனையாளர்கள் பேசினார்கள்.







இடையே மார்க்கம் நகர கவுன்சிலர் லோகன் கணபதி மற்றும் ஸ்காபரோ பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் உரையாற்றினர்.

25ஆவது ஆண்டு விழா ஒரு ஐந்து நட்சத்திர ஹொட்டலிலும், பின்னர் மெற்றோ கொன்வென்சன் சென்ரரிலும் நடைபெற உள்ளது. 25 வருடங்களாக இயங்கும் அமைப்பிடம் இருந்து கனேடிய தமிழ் வணிக நிறுவனங்கள் பற்றிய விரிவான விபரங்களை உதாரணத்துக்கு மோட்டார் கார் திருத்தும் நிறுவனங்கள் எத்தனை உள்ளன, அவற்றின் விபரங்களை 25ஆவது ஆண்டு மலரில் எதிர்பார்க்கலாம். வர்த்தக சம்மேளனம் என்பது அனைத்து வர்த்தகர்களையும் ஒன்றிணைத்து அவர்களது வளர்ச்சிக்கு உதவும் அமைப்பு. புதிதாக வணிக நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பவர், அமைப்பில் இணைவதன் மூலம் தனது நிறுவனத்தின் வருமானத்தை உயர்த்தலாம், சட்டரீதியான பல விடயங்களை அவர்களிடம் அறியலாம். பிரதான பெரும் நிறுவனங்கள் ஆண்டு விழா விற்கு உதவி புரிகின்றனவா? எனக் ஒருவர் கேட்டபோது, "எங்கள் வர்த்தகர்கள் (தமிழ்) பணத்திலேயே இவ்விழா நடைபெறும்" என பதிலளிக்கப்பட்டது. மிகப் பெரும் நிறுவனங்களுக்கு எங்களது சமூகத்தின் வலிமை தெரிய வேண்டும். அவ்வாறான நிறுவனங்களிடமிருந்து நாங்கள் பல பொருட்களை வாங்குகின்றோம், சேவைகளை பெறுகின்றோம் அவர்களிடமிருந்தும் உதவி பெறவேண்டும்.

வர்த்தக சம்மேளனம் என்பது வணிக நிறுவனங்களையும், தமிழ் மற்றும் பல்லின மக்களையும், அரசையும் இணைக்கும் ஒரு நிறுவனமாக இருக்க வேண்டும். மற்றைய பல்லின வர்த்தக சம்மேளனங்கள், மத்திய, மாநில அரசுகள் பல நாடுகளுடன் வர்த்தக உடன்பாடுகளை மேற்கொள்வதற்காக, அந்த, அந்த நாடுகளுக்கு பயணிக்கும் பொழுது தங்களது உறுப்பினர்களை அவர்களுடன் அனுப்புவார்கள்.

CTCC உம் இவ்வாறு எதிர்காலத்தில் செய்ய வேண்டும். சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்களுக்கு இரு கேள்விகளுக்கே கேள்வி கேட்க நேரமொதுக்கப்பட்டது. ஊடகவியலாளர்கள் ஒரு சமூகத்தின் கண்ணாடி. அவர்களை சம்மேளனம் அங்கீகரிப்பது சிறந்தது.

# அம்மையே அப்பா



எனக்கு
நீதி நேர்மை கருணை
புகட்டிவிட்ட
என் அம்மா

எனக்கு
பொறுமை மன்னிப்பு பணிவு
கற்றுத்தந்த
என் அப்பா

இருவரும் சேர்ந்து
இயன்றளவு
கொடைப்பண்பு
விதையையும்
என் இதயத் தோட்டத்தில்
உரமிட்டு
விதைத்துச் சென்றுவிட்டனர்

இவைகளைவிட
எனக்கு
வேறு என்ன
பெரிய சொத்து வேண்டும்
இவ்வுலகில்...?

எனது
எழுதுகோலில்
ஊறிக்கொண்டிருக்கும்
"மை"
அவர்கள் இருவரின்
வற்றாத
வியர்வை ஊற்றல்லவா

அதன்
விளைச்சல் முழுவதும்
இந்தப்
பிரபஞ்சத்தின்
வாழ்வுக்காவென்றே
நான்
அசைகிறேன்...




முத்துராஜா

MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

# தமிழ் முதியோருக்கான 30 வருட சேவையை ஒன்ராரியோவில் பூர்த்தி செய்துள்ள ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம்

ஒன்ராரியோ முதுதமிழர் மன்றத்தினர் ஏப்பிரல் மாதம் 23ம் திகதி ஆர்மீனியன் மண்டபத்தில் தமது 30 வருட சேவை பூர்த்தியடைந்ததை கொண்டாடும் வகையில் வெகு விமரிசையாக ஒரு சிறப்பு நிகழ்வினை நடத்தியிருந்தனர். முதியோருக்கான விசேட சேவைகள் அமைச்சர் கௌரவ. மரியோ சேர்ஜியோ, ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஹரி ஆனந்தசங்கரி,



மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள், கல்விச்சபை உறுப்பினர்கள், விசேட விருந்தினர்கள், மன்ற அங்கத்தவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் 1986ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி 27 தமிழ் முதியோருடன் ரொரன்ரோவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புலம்பெயர்ந்து வந்திருந்த தமிழ் முதியோரின் தனிமையுணர்வினைப் போக்கி, அவர்களுடைய திறமைகளை மீண்டும் புதுப்பித்து அவர்களுக்கும் ஒரு சந்தோஷமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதே இந்த மன்றத்தின் நோக்கமாக விருந்தது. வாரத்தில் ஒரு நாள் ஒன்றுகூடலோடு ஆரம்பித்து, சுற்றுலாக்கள் செல்வது, கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவதோடு மட்டுமல்லாமல், தாங்களே அந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது போன்ற விடயங்கள் ஆரம்ப காலங்களில் இடம்பெற்று வந்தன. 1991ம் ஆண்டு முதல் ஒரு லாபநோக்கமற்ற ஒரு அமைப்பாகவும் மன்றம் செயற்படத் தொடங்கியது.

படிப்படியாக முன்னேறி, 1300 அங்கத்தவர்களோடு, மன்றத்திற்கென யாப்பு விதிகள் முறையாக அமைக்கப்பட்டு, 15 நிர்வாகசபை உறுப்பினர்களோடும், 3 முழுநேர உத்தியோகத்தர்களோடும், வாரத்தில் ஐந்து நாட்களும், காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மன்றம் தற்போது சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. உளவள வகுப்புக்கள், கைவேலை-கணினி வகுப்புக்கள் வாராவாரம் கைதேர்ந்த ஆசிரியர்களினால் நடத்தப்பட்டு வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் வாரந்தோறும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள்.

முதியோரின் நலனை மட்டும் கருத்திற் கொள்ளாமல், சமுதாய நலனோடும், அடுத்த சந்ததிக்கான பல்வேறு திட்டங்களோடும்



மன்றம் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை 'தூய வளித்தூதுவர்கள்' (Clean Air Ambassador's Program) என்ற திட்டம் எடுத்துக்காட்டுகிறது. டிரிலியம் அமைப்பின் உதவியோடு, மூன்று வருட காலத்திற்கு இடம்பெறப் போகும் இந்த திட்டம், எவ்வாறு வீட்டிலிருந்து கொண்டே சூழல் மாசடைவதை தவிர்க்க முயற்சி செய்யலாம், மின்சக்தியை விரயமாக்காமல் தடுப்பது, மரம் நடுவது, தேவையற்ற கார் பாவனையை கட்டுப்படுத்துவது போன்ற விடயங்களை தகவல் பட்டறைகள், செயல்முறை விளக்கங்களோடு சமூகத்திற்கு விளக்கிக் கொண்டிருகிறது.

மன்றம் எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் அனேகமாக பூர்த்தியடைந்துள்ளது என்பதை அங்கத்தவர்களது எண்ணிக்கையும், வாராந்த நிகழ்வுகளில் அவர்கள் காட்டும் அக்கறையும் எடுத்துக்காட்டுகிறது. மன்றத்தின் செயற்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் பெரிதளவில் உதவிக் கொண்டிருக்கும் மன்றத்தின் தலைவர் திரு. சே. சிறீஜெயனாதன், நிர்வாக சபையினர், மன்ற உத்தியோகத்தர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் பாராட்டுதலுக்கு உரியவர்களே. இத்தோடு நின்று விடாமல் மேலும் பல சேவைகளோடு ஒன்ராரியோ முதுதமிழர் மன்றம் செயலாற்ற ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**

**Cell: 416.816.7994** **Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# வருமானம் குறைந்த முதியவர்களுக்கு கைகொடுக்கும் இலவச சட்ட உதவி நிறுவனம்!

## கனடிய தகவல் தொடர் 248

இந்த நிறுவனத்தினை ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படும். '***Advocacy Centre for the Elderly***' கனேடிய சட்டத்தரணிகள், சட்ட உதவியாளர்கள் பலரினை குழுவாக கொண்ட அரசுசார்பற்ற தர்மஸ்தாபனம் - Non Government registered charity.

இந்நிறுவனம் 1984ஆம் ஆண்டு தொடக்கம் வருமானம் குறைந்த முதியவர்களின் பிரச்சினைகளுக்கு இலவசமாக சட்ட ரீதியான உதவி செய்து வருகின்றது. இந்த தர்மஸ்தாபனத்திற்கு வேண்டிய நிதி உதவிகள் ஒன்ராறியோ சட்ட உதவி மையத்தினால் (Ontario Legal Aid) வழங்கப்பட்டு வருகின்றது.

வாழ்வின் பல கட்டங்களில் வழிகள் எது என தெரியாத சட்டப் பிரச்சினைகள் பலருக்கும் பலவழிகளில் ஏற்படும். இந்த நிலையில் நிதி நிலைமை, முதிர்ச்சியின் மாறாட்டம் என்பன இவற்றுக்குத் தடையாக இருக்கலாம்.

இத்தகைய நிலையில் உள்ளவர்கள் தேவை ஏற்பட்டால் அணுகிப் பார்க்க வேண்டிய நிறுவனமே இதுவாகும். முதியோர்களுக்கான இலவச சட்ட உதவி வழங்கும் நிறுவனத்தின் முகவரியும் விபரங்கள் இதுவாகும்.

ACE - Advocacy Centre for the Elderly
(Legal services for seniors)
02, Carlton St., suite #701
Toronto, ON M5B 1J3
Phone - 416-598-2656
Fax - 416-598-7924
இணையதளம் - www.acelaw.ca

இந்நிறுவனத்தில் இலவசமாக சட்டத்தரணிகளின் சட்ட உதவிகளை பெறுபவர்கள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்:

1. 60 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. ரொறொன்ரோ அல்லது அதன் சுற்றுபுற நகரங்களில் வாழ்பவராக இருக்க வேண்டும்.
3. நிறுவனத்தின் வரைவிலக்கணத்தினுள் சட்ட உதவிகளை பெறுபவர்களாக இருக்க வேண்டும்.
4. வருமானம் என்பது நிறுவனத்தின் அட்டவணைக்குள் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பின்வரும் பிரச்சினைகள் உள்ள முதியோருக்கு சட்ட உதவிகளை இந்நிறுவனம் வழங்குகின்றது.


1. ஒய்வூதியங்கள் வழங்குவதில் ஏதாவது



தடைகள்

2. முதியோர் குடியிருப்பு மனைகளின் கவனக்குறைபாடுகள்!
3. முதியோரின் அதிகாரங்கள், உரிமைகளை தவறாகப் பயன்படுத்தும் குடும்பத்தவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள்
4. முதியோரின் பணம், சொத்துகளை அனுமதியில்லாது கையாள்பவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள்
5. வைத்தியசாலையிலிருந்து திரும்பி வரும்போது ஏற்க மறுக்கும் முதியோர் இல்லங்கள்
6. வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் போது, தங்கும் போது, வெளியே வரும்போது ஏற்படும் பிரச்சினைகள்
7. வெளியே சென்று வரும்போது சேவை வழங்கும் நிறுவனங்களினால் எதிர்கொள்ளும் அழுத்தங்கள்
8. உள, உடல், நிதியியல் ரீதியான உதாசீனங்கள், மிரட்டல்கள்

இப்படியொரு நிறுவனம் ரொறொன்ரோவில் இருந்து இயங்குவதால் தேவை ஏற்படும் தமிழ் முதியவர்கள் இவற்றை ஒரு முறை அணுகி பார்க்கலாம்.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



mhc
**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

***WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:***

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*


# அழகியின் அமைதி


ஓடம் கரையோரமாக ஒதுங்கியது
ஓவியமாக அவள் மட்டும் தனியே அதில்
ஓயாத அலைகள் கூட
ஒய்ந்து ஆரவாரத்தையும் தம்முள் அடக்கிக்கொண்டன



தென்கரையோரமாய் நெடுந்தூரத்திலிருந்து
தெருப்பாடகன் ஒருவன்
தெவிட்டாத இசை தனை மீட்க
தென்றல் அதை ஆர்வமாக சுமந்து வர


பூம்பாவை மட்டும் மௌனமாக
பூமாலையை சுமந்தபடி
புன்னகை பூத்த மனதுடன்
புதிராக அமர்ந்திருந்தாள்

அமைதியும் அவளிடம் பாடம் கேட்டது
அன்பின் சுகம் நெஞ்சில் தஞ்சம் கொண்டது
அகிலமே அவள் உள்ளங் கையில் அடங்கிக்கொள்ள
அழகி அவள் மட்டும் தனிமையில் சாந்தம் கொண்டாள்



மீரா குகன்
ஜேர்மனி

MARKHAM & KINGSTON
CONDO TOWN HOMES



Price Starting From: $299,000
Low Maintenance Fee.



A. Anton Jeeva, FRI
(Broker)
Remax Dynasty Realty Inc., Brokerage*
Dir: 415.575.5055
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

HAMILTON



* Close to MCMASTER University.
* Close to all Facilities
Guaranteed Rental Income
Call for VIP Pricing
Prices Starting From: $250,000




A. Anton Jeeva, FRI
(Broker)
Remax Dynasty Realty Inc., Brokerage*
Dir: 415.575.5055
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

# மாதவிடாய் கோளாறுகள் முறை தவறும் மாத சுழற்சி

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

சங்க கால இலக்கியங்கள் பெண்களின் வயதிற்கு ஏற்றவாறு பருவத்தை பிரித்துக் கூறின. ஐந்து வயது வரை உள்ள பருவத்தை பேதை என்றும் 5 இலிருந்து 12 வயது வரை பெதும்மை என்றும் 12 வயது முதல் 16 வயது வரை மங்கை என்றும் 16 வயது முதல் 21 வயது வரை மடந்தை என்றும் 21 வயது முதல் 27 வயது வரை அரிவை என்றும் 27 வயது முதல் 35வயது வரை தெரிவை என்றும் 35 வயதுக்கு மேல் பேரிளம் பெண் என்றும் பிரித்தனர். இதை தற்போதைய விஞ்ஞான உலகம் சிறுமி பருவம், குழந்தை பெறும் பருவம், மெனோபாஸ், போஸ்ட் மெனோபாஸ் என்ற வகைகளாக பிரிக்கின்றனர்.



எப்படி இருப்பினுன் குறிப்பிட்ட வயதில் பருவம் எய்தி பின் குறிப்பிட்ட காலத்திற்குள் பிள்ளை பெற்று கடைசியாக சரியான வயதில் மெனொபாஸ் அடைவது என்பதுவரை பெண்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் ஏராளம். மாதவிடாய் பிரச்சினைகள் பெண்களின் ஆரோக்கியத்திற்கு சவால் விடுபவைகளாக இருக்கின்றன.

மாதவிடாய் சுழற்சி சரியான முறையில் அமைந்தால் முக்கால்வாசி பிரச்சினைகள் தீர்ந்து விடுகிறது. சுமார் 15 சதவீ பெண்களுக்கு மட்டுமே சரியான மாத சுழற்சி காலமான 28 நாட்களுக்கு ஒருமுறை மாதவிலக்கு ஏற்படுகிறது. மற்றவர்களுக்கு 22 நாட்கள் முதல் 35 நாட்களுக்குள் வருகிறது. இதனைக்கூட ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஐம்பது நாட்கள் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒருமுறை என்று எந்த வரைமுறையும் இல்லாமல் வரும்போது பிரச்சினையாகிறது. இந்த வகையை நாம் Poly Cystic Ovarian Disease என்று கூறுகிறோம். முறை தவறும் மாத சுழற்சி எதனால் ஏற்படுகிறது.

ஹோர்மோன்கள் சரியான அளவில் சரியான நேரத்தில் சுரப்பதில் ஏற்படும் குறைபாட்டால் இந்த மாத சுழற்சி குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஹோர்மோன்கள் நாளமில்லா சுரப்பிகள் மூலம் சுரக்கப்பட்டு இரத்தத்தில் கலந்து அதுபோய் சேர வேண்டிய உறுப்புகளுக்கு சென்றடைகிறது. ஹோர்மோன் சுரப்பிகள் முக்கியமானவை. தலையில் மூளையின் அடிப்பாகத்தில் பட்டாணிக் கடலை அளவுக்கு இருக்கும் பிட்யூட்டரி, தொண்டையருகே முன்னங்கழுத்தில் இருக்கும் தைரொய்டு, கிட்னிக்கு தொப்பி வைத்தது போல் கிட்னிக்கு அருகில் இருக்கும் அட்னரால் (Adrenal) பெண்களுக்கு சினைப்பை (சுரக்கும் ஹோர்மோன், ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்ட்ரான்), ஆண்களுக்கு விந்துப்பை, இவை அனைத்தையும் ஆட்டுவிக்கும் ஹிப்போதலமஸ் (hypothalamus) எனும் தலைமையகம் இதனுடைய கட்டளைப்படி அணைத்து ஹார்மோன்களும் சரியான அளவில் சுரக்கின்றன. இவற்றில் எங்காவது பிழை ஏற்பட்டாலோ அல்லது தயக்கம் ஏற்பட்டாலோ அனைத்தும் தலைகீழாகி விடுகிறது.

தைரொய்டு ஹோர்மோன் குறைந்தால் மாதவிலக்கு சுழற்சியில் மாற்றம் உண்டாகும். அதேநேரம் மற்ற ஹோர்மோன்கள் மாறுபட்டாலும் மாதவிலக்கு சுழற்சியில் குறைபாடு உண்டாகும். மாதாந்தர சுழற்சியின் முதல் பதினான்கு நாட்கள் (28 நாட்கள் கொண்ட மாதவிலக்கு உள்ளவர்களுக்கு) ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் கட்டுப்பாட்டில் இருக்கும். இது சினைமுட்டைக்கூடுகளில் சுரக்கப்படுகிறது. இது தானாக சுரப்பதில்லை. பிட்யூட்டரியால் (pituitary) தூண்டாடப்பட்டு மட்டுமே சுரக்கக்கூடியது. இது சினைமுட்டை சரியான அளவில் வளர்ச்சி அடைய உதவுகிறது. சினைமுட்டை சரியான வளர்ச்சி அடைந்தபின் சினைமுட்டைக் கூட்டிலிருந்து சரியாக 14 நாட்களில் வெடித்துக் கொண்டு ஓவம் வெளிவருகிறது. பின் இந்த கூட்டை கார்ப்பஸ் லூட்டியம் என்று கூறுகிறோம். இதிலிருந்து சுரப்பது புரொஜெஸ்டரன். இது அடுத்த 14 நாட்களுக்கு சுரக்கும். ஓவம் தன் இணையை (விந்து) தேடாமல் இருந்தால் தானாகவே புரொஜ்ஸ்ட்ரான் சுரப்பு குறைந்து மாதவிலக்கு ஏற்படும். கரு உருவானால் இதே புரொஜெஸ்ட்ரான் கருவுக்கு மெத்தென்று படுக்கை விரித்து அதனை பராமரிக்கும்.

ஈஸ்ட்ரோஜன் சுரக்கும் முதல் 14 நாட்களில் பெண்மைக்கே உரிய பளபளப்பு, சுறுசுறுப்பு, சந்தோஷம், தைரியம் அனைத்தும் இந்த ஹோர்மோனால் ஏற்படும். ஆனால் புரொஜெஸ்ட்ரான் சுரக்கும் பின் 14 நாட்களில் டென்ஷன், பயம், மன உளைச்சல் என படாய்படுத்தும். இதனையே Premenstrual tension என்று கூறுகிறோம். பெண்களிடம் பிரச்சினைகள் அதிகம் காணப்படுவது இந்த நாட்களில்தான் என்று ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன.

மாத சுழற்சி சரியாக இல்லாமல் இருப்பதற்கு நிறைய காரணங்கள் கூறப்படுகின்றன.

- அதிக உடல் எடை
- அதிகமான உடற்பயிற்சி
- சரிவிகித உணவு இல்லாமை, அதிக அளவு மாவுச்சத்து பொருட்களை உண்பது
- அதிவிரைவு உணவு வகைகளை அதிகம் உண்பது
- கோப்பி / ரீ மற்றும் கஃபின் அதிகமுள்ள குளிரூட்டப்பட்ட பானங்கள் அதிகம் எடுத்துக் கொள்வது.
- தேவையற்ற நேரத்தில் உண்பது. நொறுக்குத்தீனி உண்பது.
- அதிக மனஅழுத்தம்
- தனக்குத் தானே மருத்துவம் பார்த்துக் கொள்வது.
- தலைவலி காய்ச்சல் என்றால் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்து உட்கொள்வது.
- கர்ப்பப்பைக் கோளாறுகள் (கட்டிகள், நீர்க்கட்டிகள், கிருமித் தொற்று)

மேற்சொன்ன பிரச்சினைகளில் எது இருப்பினும் அவற்றை களைந்தால் முறையான மாத சுழற்சி நிகழும்.

• மாதவிடாய் ஒழுங்கான இடைவெளியில் வராத பெண்களுக்கு திராட்சைச் சாறு சிறந்த ஊட்டமாகவும் மாதவிலக்கு ஒழுங்காக நிகழ்கிறது.



ஆரோக்கிய வாழ்வு
N. Dr.
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# காலத்தால்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

சந்தர்ப்பம் அறிந்து கதைக்க வேண்டும். இல்லாவிட்டால் அது கதைத்தவருக்கே கேடுவிளைவிப்பதாக அமைந்து விடும். இக்கருத்தை "நுணலும் தன்வாயால் கெடும்." என்பது விளக்குகிறது.
எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அது தீமைதரும். அளவுக்கு மீறிய உணவு தீமையைத்தரும் அளவுகடந்த கோபம் துன்பத்துக்கு வழிவகுக்கும். அளவுகடந்த மகிழ்ச்சி நிதானத்தை இழக்கச்செய்யும். எனவே எக்காரியத்திலும் எல்லை தாண்டினால் தீமையே என்பதை "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது வெளிப்படுத்துகிறது.

நாம் நினைத்ததை எல்லாம் பெற்றுவிட முடியாது, தொண்ணூறு வீதம் எம்கையில் உண்டு. மிகுதி பத்து வீதம் எமக்கு அப்பாற்படவையே. முயன்றும் கிடைக்காத சந்தர்ப்பத்திலும் எம் சக்திக்கு அப்பாற்பட்டது என உணரும் சந்தர்ப்பத்திலும் எம்மனதுக்கு ஆறுதல் தரக்கூடிய முதுமொழி "கிட்டாதாயின் வெட்டென மற" என்பதாகும்..


கோபம் வராமல் பொறுத்துக்கொள்வது நல்லது. கோபத்தை கட்டுப்படுத்தமுடியாது பொங்கி எழுந்தால் தீமை வரும் என்பதற்கு உதாரணமாக அமைவது "பொறுத்தார் பூமி ஆள்வார் பொங்கினார் காடு ஏகுவார்." என்பதாகும். நாம் எப்படி சிறப்பாக வாழ்ந்தாலும் புறத்தாக்கங்களால் பிறர்கூறும் தவறான விமர்சனங்களால் ஒரு கணம் ஆடிப்போவதும் உண்டு. அதற்கும் ஒரு பழமொழி உண்டு "சந்திரனைப்பார்த்து நாய் குரைத்து ஆவது என்ன?" என்பதே அந்தப்பழமொழியாகும்.

நாம் நாமாக இயங்கவேண்டும். எமக்கு என்று ஒரு வழியை ஆக்கிக்கொள்ள வேண்டும். எம்மீது நாம் நம்பிக்கைகொண்டு எம்மால் செய்யக்கூடியவற்றை விருப்போடு செய்து வாழ்ந்தால் கோடி நன்மை உண்டாகும். புறத்தாக்கங்கள் எதுவும் எம்மைத்தாக்காது விழிப்புடன் வாழ்வோம். " தன் கையே தனக்கு உதவி" என்பது எம் தன்னம்பிக்கையை மேலும் வளர்ப்பதாக அமைகிறது.

கூடிவாழும் மக்களுடன் வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நன்மை தரும். அது ஒற்றுமையான வாழ்வுக்கு வழி வகுக்கும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பது அதனை விளக்குகின்றது.

பொன்மொழிகளாம் பழமொழிகள் நூற்றுக்கு மேற்பட்டவை தமிழில் உள்ளன. பிறமொழிகளிலும் அந்தந்த முதியோர்களினால் வழங்கப்பட்ட பழமொழிகள் உள்ளன. யாவற்றையும்தேடிக் கற்று அறிந்து புரிந்து வாழ்வோம். பழமையில் உள்ள நல்ல விடயங்களை தேர்ந்தெடுத்து வாழ்வுக்கு ஒளி ஊட்டுவோம்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca


This AKSHAYA TRITIYA
Usher in Prosperity
அக்ஷய திருதியை
சிறப்பு மலிவு விற்பனை
Special Sale - May 6 to 9, 2016
BRING YOUR OLD JEWELLERY AND GET NEW JEWELLERY FOR BEST PRICE
NEW COLLECTION IN 22 CARAT GOLD JEWELLERY WITH LARGEST VARIETY
IP
50% OFF ON DIAMOND JEWELLERY
அனைத்துவிதமான 22 கரட் புதிய தங்கநகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்
உங்களது பழைய நகைகளை எங்களிடம் கொடுத்து மிகவும் சிறந்த விலையில் புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்
UNBEATABLE PRICE
IP GOLDHOUSE JEWELLERS
IP SILVERHOUSE
SALE
SALE
40 NEW DELHI DRIVE UNIT 56 & 57
MARKHAM ON. ( 905) - 554 - 5890


கனேடியத் தமிழர் வர்த்த
CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE
25
CTCC
1991 - 2016
வெள்ளிவிழ
புரட்டாதி மாதம் 09
GOLD SPONSOR
Lebara
GOLD SPONSOR
NAVA LAW
PROFESSIONAL CORPORATION
www.nava.law
உலக நாடுகளில் இருந்து தமிழ் தலைவர்களும், கல்விமான்கள
கனேடிய அரசியல் பிரமுகர்களும், பல்லின மக்கள் பிரதிநி
நிகழ்விற்கான அனு
Community Sponsor
HOME & AUTO INSURANCE
SUREN NAVARATNARAJAH
416-520-6916
Community Sponsor
Life100
INSURANCE & INVESTMENTS INC.
www.life100.ca
Community Sponsor
TET HD
www.iwatchtet.tv
Community
Moon Maha
TD
Canada
Community Sponsor
www.NewReleaseCondo.com
SUJAN SHAN
Real Estate Broker 416.262.2000
RE/MAX
Community Sponsor
Ravi Kanagasabey
647-629-4434
Arthur Fire Protection Inc.
www.arthurfire.com
(905) 494-1408 Toll-Free: 1-(866) 315-1408
Community Sponsor
We Decorate, You Celebrate!
Commun
WWW.S
Community Sponsor
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
WWW.SANTHA.ca
416-200-5470
Community Sponsor
Senthooran Punithavel
416-396-0707
spunithavel@cooperators.ca
the co-operators
A Better Place For You
Community Sponsor
Active Green + Ross
COMPLETE TIRE & AUTO CENTRE
Tire Expert Christy
416.321.3443
3505 KENNEDY
Commun
www.asi
கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளன
" இளைய சாதனைத்

தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு

ாக் கொண்டாட்டம் 2016

மற்றும் 10ம் திகதிகளில்

GOLD SPONSOR
Kanish&Partners LLP
Chartered Accountants and Business Advisors

GOLD SPONSOR
RBC Royal Bank

நம், வர்த்தகத் துறையில் சாதனை நிலை நாட்டிய தமிழர்களும்,
திகளும் கலந்துகொள்ளும் எமது பிரமாண்ட வெள்ளிவிழா
னுசரணையாளர்கள்

ity Sponsor
alingam
Trust

Community Sponsor
747 AUTOPARTS
The Right Price; The Right Choice
www.747autoparts.com

Community Sponsor
Chef RAMANAA
www.cheframanaa.com

Community Sponsor
Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman B.Eng
416-993-0826
Christeen Seevaratnam
416-258-6759
www.chapelridgefh.com

ity Sponsor
hinol inc.
shinol.ca

Community Sponsor
Sathya Law
Barrister, Solicitor & Notary Public
www.sathyalaw.com
1585 Markham Road, Suite 204, Scarborough, ON M1B 2W1.
Tel.: 416 291 7888 Fax: 416 291 7886

Community Sponsor
DILANI GUNARAJAH
BARRISTER | SOLICITOR | NOTARY PUBLIC
Phone : 416-755-7777 Fax : 416-288-8633
2401 Eglinton Avenue East, Suite 210, Toronto, Ontario M1K 2N8
E-Mail : dilani@rogers.com

Community Sponsor
altona custom homes
www.altonahomes.ca

ity Sponsor
iyans.com

Community Sponsor
Century 21
Innovative Realty Inc. Brokerage
416-298-8383
www.century21.ca/innovativerealty

அனுசரணையாளர்களாக உங்களையும் இணைந்துகொள்ள உடன் அழையுங்கள்
ரோசான் தவரட்ணம் (Roshan)
வெள்ளிவிழா நிகழ்வு இயக்குனர்
(416)-561-5733

த்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

தமிழர்களை நோக்கி "




# இசை நடன விழா 2016

தமிழ் இசைக்கலா மன்றத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான இசை நடன விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் தமிழ் இசைக்கலா மன்றத்தின் புதிய மண்டபத்தில் 2016 ஏப்பிரல் 23 இல் நடைபெற்றன.

1991 இல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் இசைக் கலா மன்றம் இந்த ஆண்டு வெள்ளி விழாவை கொண்டாடுகிறது. தற்போது இம்மன்றம் 450 பேர் இருந்து பார்வையிடக் கூடிய ஒரு புதிய மண்டபத்துடன் 1120 Tapscott Road இல் அமைந்துள்ளது.




தமிழ் இசைக்கலாமன்ற பரீட்சைகளில் தற்போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், நடனம் போன்ற பாடங்களில் பங்குபற்றுகிறார்கள். இப்பரீட்சைகளில் விசேட, திறமைச்சித்தி பெறும் மாணவர்களுக்கு இம்மன்றம் இசை நடன விழாவில் மேடைவாய்ப்பு அளித்து சான்றிதழ்களையும் வழங்குகின்றது. இந்த இசை நடனவிழாக்கள் மொன்றியல், ஒட்டாவா மற்றும் ரொறொன்ரோவில் ஏழு நாட்கள் நடைபெறுகின்றன. இந்த இசை நடன விழாவின் 2016 ஆம் ஆண்டிற்கான இறுதி இரண்டு நிகழ்வுகளும் 2016 ஏப்பிரல் 23 மாலை 2 மணிக்கும் 6:30 மணிக்கும் நடைபெற்றன.

இங்குள்ள படங்களில் 6:30மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்கள் சிலரையும் நடனவிழாவின் இறுதியில் சான்றிதழ்கள் பெற்ற மாணவர்களுடன் அவற்றை வழங்கிய ஆசிரியர் திருமதி விஜயலக்சுமி சீனிவாசகம் அவர்கள் நிற்பதையும் காணலாம்.






# ஒப்பிலா 'மே' தினம் இன்று



விழிபோன்று நாட்டினுக்காய் அமைந்திருந்து
வியர்வை சிந்தி உழைக்கின்ற தொழிலாளர்கள்
ஒன்று கூடி நின்று கொண்டாடும்
ஒப்பிலா 'மே' தினம் இன்று


உழைப்பீந்து நாட்டினை உயர்த்துகின்ற - கடின
உழைப்பாளிகளை உணர்வுபூர்வமாக நாம்
எல்லோரும் இணைந்து போற்றுவோம்
அவர்தம் பெருமைதனைப் பறைசாற்றுவோம்

தொழிலாளர்களின் ஆற்றலினால்தான் உலகெங்கும்
தொழிற்சாலைகள் விதம்விதமாக உருவாகின
அதனால் முதலாளிகள் மட்டுமின்றி
தொழிலாளிகளும் கூட உயர்வாகினர்

தொல்லை உறும் தொழிலாளர்களுக்கு உதவவே
உலகெங்கும் தொழிற்சங்கங்கள் உருவாகின
அலை வழிவழியாய் தொழில் செய்வோர்க்கு
நல் வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டின

தாழ்வில்லா வாழ்க்கைக்குத் தொழில் ஒன்று வேண்டும்
செய்கின்ற தொழிலைத் தொழிலாளி மதிக்கவும் வேண்டும்
முதலாளி உயர்ந்தால்தான் தொழிலாளியும்
உயரலாம் என்ற உணர்வும் வேண்டும்

ஒப்பில்லாத் தொழிலாளர் உறவு வெல்க
உழைப்பாலே இவ்வுலகம் வெல்க வெல்க.



கவிநாதம் பரந்தாமன்

# தெறி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

நிவியின் செய்கையை பார்த்த ஜோசப், கெட்டபிள்ளையால் அழியப் போகும்



வில்லனை பார்த்து பிள்ளை வளர்ப்புபற்றி ஒரு முக்கிய கருத்தை கூறுகிறார். ஒரு குற்றவாளியின் பின்னால் பெற்றோரின் தவறான வளர்ப்புத்தான் இருக்கிறது என்கிறார். வில்லனின் மகன் பெரும் குற்றங்களை செய்தது, வில்லன் ஒரு தகப்பனாக அடைந்த தோல்வி என்றும், தனது மகள் வில்லன் செய்த குற்றங்களை அறிந்தும் அஞ்சாமல் மன்னிப்பு கேட்டால் மன்னிக்கலாம் என்றது, தான் ஒரு தகப்பனாக அடைந்த வெற்றி எனவும் பெருமிதத்துடன் கூறுகிறார்.

அத்துடன் மனைவியானவள் கணவனின் இரண்டாவது தாய் எனவும், மாமி - மருமகள் உறவு தாயும் - மகளும் உறவு போன்றது எனவும் குடும்பம் தான் முக்கியம் எனவும் கூறுமிடங்களும் மனதை நெகிழ வைக்கின்றன. வழமைபோல் பாடல்களும் நன்றாக இருக்கின்றன. பெற்றோர் பிள்ளைகளுடன் சென்று பார்க்க வேண்டிய படம் இது.

# வாழ்க்கைப் பயணங்கள் - 16

அமலாவிற்குப் பசித்தது. நேரத்தைப் பார்த்தாள் பகல் 1 மணி. தான் கொண்டு வந்த பகல் உணவையும் எடுத்துக் கொண்டு உணவருந்தும் இடத்தை நோக்கிப் போனாள் அமலா. "மைக்கிரோ அவனில்" உணவைச் சூடேற்றிக் கொண்டு போய் அமர்ந்தாள். அவளின் ரீமைச் சேர்ந்தவர்கள் அங்கும் இங்குமாக இருவர் மூவராக உரையாடியவாறு போய் அமர்ந்தார்கள். அமலா அமர்ந்து சிறு நேரத்தில் அங்கு வந்த தேவா அமலாவுக்கு அருகில் சென்று அமர்ந்தான்.

"எப்படி இருக்கிறீர்கள் அமலா" என்றான் தேவா.

அமலாவும் " நீங்கள் எப்படி? வீட்டில் எல்லாரும் சுகமா? குழந்தை எப்படி" என்று தேவாவைக் கேட்டாள்.

"எல்லோரும் சுகமாக இருக்கிறார்கள். எனது மனைவி நிலாவுடன் உங்களைப் பற்றிக் கூறுவதுண்டு. உங்களையும் குழந்தையின் பிறந்த நாளுக்கு அழைக்க வேண்டும் என்று சொன்னாள். அடுத்த மாதம் 7ம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை தான் வருகின்றது. முதலாவது பிறந்த நாள் என்பதால் ஒரு பாங்கற் ஹோலில் செய்வம் என்று இருக்கிறம்." என்றான் தேவா.

"அப்படியா, எனக்கும் உங்கள் மனைவியையும், குழந்தையையும் பார்க்க விருப்பம். பிறகு சொல்லுங்கள். வருகிறேன். என்றாள்" அமலா.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை என்பதால் கொஞ்சம் "நிலாக்சாக" எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அமலாவுக்கும் தேவாவுடன் தமிழில் உரையாடுவதில் மகிழ்ச்சியாக இருந்தது. அமலாவில் ஏற்பட்ட மாற்றமும் உரையாடலில் பிரதி-பலித்தது. உரையாடல் சொந்த நாட்டு நிலைமை பற்றியும் இருந்தது. அமலா வழமையை விட கொஞ்சம் அதிகமாக மகிழ்ச்சியுடன் உரையாடுவதை தேவாவும் கவனிக்கத் தவறவில்லை. தேவாவும் பதிலுக்கு இன்று அமலாவுடன் கூடக் கதைத்துக் கொண்டான்.

அமலா நேரத்தைப் பார்த்து விட்டு "நான் இன்று சோட் லீவில் போகின்றேன். அதற்கிடையில் கொஞ்சம் வேலை முடிக்க வேணும். பிறகு சந்திப்போம்" என்று கூறிவிட்டு தேவாவிடம் விடைபெற்றுக் கொண்டு தனது இருப்பிடத்தை நோக்கிச் சென்றாள். அமலாவுக்கு தேவாவுடன் தமிழில் உரையாடியது ஒரு விதமான மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அமலா வேலையில் மூழ்கினாள். நேரம் 3:15 மணியானதும் புறப்படுவதற்குத் தயாரானாள். அவள் தனது பெற்றோரைக் கனடாவுக்கு அழைக்கும் விடயமாக தமிழ்ச்சங்கத்திற்குப் போகவேண்டியிருந்தது. ஏற்கனவே அவள் ஒருநாள் அங்கு சென்று வேண்டிய வேலைகளைச் செய்து ஸ்பொன்சருக்கு விண்ணப்பித்து விட்டாள். இன்று அங்கு சென்று சில பத்திரங்களைக் கையளிக்க வேண்டியிருந்தது. ரீம் லீடரிடமும் கூறிவிட்டு புறப்பட்டு நேரே தமிழ்ச்சங்கத்திற்குச் சென்று பத்திரங்களைக் கையளித்துவிட்டு வீடு திரும்ப 6 மணியாகிவிட்டது. இன்று நடந்தது கூட என்பதால் அமலா மிகவும் களைப்பாக இருந்தாள். சோபாவில் வந்து இருந்ததுதான் தெரியும். தன்னை அறியாம லேயே குட்டித் தூக்கம் போட்டுவிட்டாள்.

அமலா கண்விழித்துப் பார்க்கையில் நேரம் இரவு 8 மணி. இரண்டு மணி நேரம் நித்திரை கொண்டு விட்டு எழுந்ததால் மனம் நல்ல அமைதியாக இருந்தது. வீட்டிற்கு வரும் வழியில் இரவுச் சாப்பாட்டையும் வாங்கி வந்து விட்டதால் சமைக்க வேண்டிய தேவை இல்லை. சோபாவை விட்டு எழுந்து உடுப்புக்களை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தாள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவளின் வாய் ஒரு மகிழ்ச்சி தரும் பாட்டை முணுமுணுத்தது. நான் எதற்காக எந்த நேரமும் சோகப் பாட்டையே பாட வேண்டும். எனது வாழ்க்கையை நானே மாற்ற வேண்டும். என்னைப் போல துன்பமுறும் எல்லாப் பெண்களும் எதிர்கொள்ளும் தடை-களை உடைத்து தமது வாழ்க்கையை மகிழ்வானதாக மாற்ற வேண்டும். என்னைத் தவிக்க விட்டு தடம் மாறிய அவன் கண்முன் எனது வாழ்க்கையை மாற்றி நடந்து காட்ட வேண்டும். நான் இனிமேல் அழமாட்டேன். என் கடவுளும் இதற்கு மேலும் என்னைச் சோதிக்க மாட்டார். யாருமே இல்லாத அந்த வீட்டின் குளியலறைக்குள் நின்றவாறு தனக்குள்ளே ஆனால் சத்தமிட்டுத்தான் கூறினாள். குளிப்பை முடித்துக் கொண்டு பிரார்த்தனை யில் இறங்கினாள். இன்று எனது அப்பாவும், அம்மாவும் விரைவில் இங்கு வந்து விடவேண்டும் என்று கடவுளை வேண்டி விசேடமாகப் பிரார்த்திக்கப் போவதாக மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள் அமலா. எல்லாக் கடவுளும் ஒன்று சேர்ந்து தனக்கு உதவ வேண்டும் என்று மன்றாடி-னாள். சத்தமிட்டுப் பாடல்களைப் பாடி வணங்கினாள். எனது அப்பாவும், அம்மாவும் விரைவில் என்னிடம் வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை அவள் மனதில் ஆழமாகத் தோன்றியது.

அடுத்த நாள் காலமை 3 மணிக்கே என்னை எழுப்பினா மாமி. எனக்கு விசர் வந்தது. நிம்மதியாகப் படுக்கவும் விடாது என்னைப் பிடித்த சனியன் என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே எழும்பினேன். என்னை எழும்பிப் போட்டு மனிசி போர்த்து மூடிக் கொண்டு படுத்தது. ஆத்திரமாக இருந்தது. அரைகுறை நித்திரையோடு வோஷ்றூம் போனேன். 4 மணிக்குப் முன்னரே பள்ளிக்கூடப் புத்தகப் பையையும் எடுத்துக் கொண்டு முன் ஹோலுக்குப் போய் காத்துக் கொண்டிருந்தேன். அந்த அன்ரி வந்து ‘ஹோண் அடித்தா, அவவின் வானில் ஏறிப் போனேன். சில நிமிடத்தின் பின் ஒரு சந்தியிலை வீடுகள் அதிகமாக இருக்கிற இடத்திலை இறக்கி ஒரு பேப்பரைத் தந்து’ இந்தத் துண்டிலை இருக்கிற எல்லா நம்பர் வீடுகளுக்கும் ஒரு பேப்பரைப் போட்டிட்டு அடுத்த சந்தியிலை நில்லும் நான் போட்டிட்டு வந்து ஏத்திறன்’ என்று ஒரு வண்டிலை வானிலை இருந்து எடுத்துப் பேப்பர் கட்டுகளை அதில் ஏற்றித் தந்தா. பேப்பரில் 100க்கு மேற்பட்ட நம்பர்கள் இருந்தன. அன்று சாடையான குளிர் இருந்தது. இடமும் நன்கு பழக்கமில்லை. நம்பர்களைப் பார்த்து பேப்பர்களைப் போடத் தொடங்கினேன். தெருவில் சன நடமாட்டமே இல்லை. பயமாகவும் இருந்தது. எல்லாம் தலைவிதி என்று நினைத்துக் கொண்டே போட்டுக் கொண்டு போனேன். ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் போடுவது சிரமமான வேலை. சில வீடுகள் உள்ளே இருந்தன. சிலதூரம் நடக்க வேண்டும். அந்தப் பகுதியில் பெரும்பாலும் பெரிய வீடுகளாவே இருந்தன. வண்டிலையும் இழுத்துக் கொண்டு நடப்பது பெரும் கஷ்டமாக இருந்தது. ஒருவாறு அவ எழுதித் தந்த பேப்பரின் படி வீடுகளுக்குப் போட்டு முடிந்தது. கடைசிப் பேப்பர்களுக்குப் போட்டு முடிந்ததும் கடைசிப் பேப்பர் போட்ட வீட்டுக்கு முன்னால் நின்று

## அலசல் அரங்கம் - 6

கொண்டிருந்தேன். காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. கார்களும், ஆட்களும் தெருக்களில் ஐந்து மணியிலிருந்ததே போய்வர ஆரம்பித்தன. பத்து நிமிடங்களுக்களுக்குப் பின் அந்த அன்ரி வந்து வானில் ஏற்றினா, வண்டிலைப் பின்னால் வைத்து விட்டு ஏறினேன். ஏழு மணிக்கு மேலிருக்கும் என நினைத்தேன். வழியிலை ஓரிடத்தில் நிற்பாட்டி இரண்டு கோப்பி வாங்கி, ஒன்றை எனக்குத் தந்தா. குடி உன்னைப் பள்ளிக் கூடத்திலை விட்டுப் போட்டுப் போறன்’ என்றா. சிறிது நேரத்திலை இறக்கிப் போட்டுப் போட்டா.

**- துறையூரான் -**

பள்ளிக்கூடத்தில் சன நடமாட்டமே இல்லை. வெளியிலை இருந்து கோப்பியைக் குடித்தேன். சில நிமிடங்களின் பின் பள்ளிக்கூடம் திறந்தார்கள். உள்ளே போய் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன். காலைச் சாப்பாடு சாப்பிடவில்லை. மத்தியானம் கையில் இருந்த காசுக்கு கன்ரீனில் உருளைக்கிழங்குப் பொரியில் வாங்கிச் சாப்பிட்டேன். அன்று மாலை வீட்டுக்குப் போய் தேத்தண்ணி மட்டும் குடித்தேன். இரவுச் சாப்பாடு செய்தபின் தான் மாமி சாப்பாடு தருவா. மத்தியானச் சாப்பாட்டைப் பற்றிக் கேட்கவே இல்லை. அடுத்த நாள் காலமை மாமியிடம் மத்தியானச் சாப்பாட்டுக்கு ஏதாவது தாருங்கோ அல்லது காசு தாருங்கோ என்று கேட்டேன். அவ காசில்லை வேணுமென்றால் பாணைக் கட்டிக் கொண்டு போ என்றா. இரண்டு துண்டு பாணை எடுத்து பட்டர் பூசி பைக்குள் வைத்தேன். இரண்டு நாட்களின் பின் மத்தியானச் சாப்பாட்டுக்கு காசில்லாமல் போனது. காலமையே பாணைச் சாப்பிடுவதால் மத்தியானம் பட்டினி தான். இதுபற்றி நண்பன் என்னிடம் கேட்டான். நான் நடந்த விடயங்களைச்

**தொடர்ச்சி 40ஆம் பக்கம்**



Math tutorial 321

Answers to tutorial 320

1)The product of $20^{50}$and$50^{20}$ can be written as follows

$(20^{50})(50^{20})$
$=(2^2.5)^{50}(5^2.2)^{20}=2^{100}.5^{50}.5^{40}.2^{20}$
$=2^{120}.5^{90}=2^{30}(2^{90}.5^{90})=2^{30}.10^{90}$
from this we see there are 90 zeros at the end

2)2y=3x ,hence y=3x/2
substituting in $x^2/8+y^2/18$

Gives $x^2/8+x^2/8=1, x^2/4=1, x=\pm2$
sobstituting in y=3x/2 ,the point of intersection are (2,3) and (-23)

$QR=\sqrt{52}=2\sqrt{13}$

3)$\binom{8}{K}(2X)^{8-K}(X^{-1})^K$

$=\binom{8}{K}(2^{8-K})(X^{8-K})(X^{-K})$

$=\binom{8}{K}(2^{8-K})(X^{8-2K})$ for the term containing $x^2$ 8-2k=2,k=3 the coefficient is$\binom{8}{3}(2)^5$=56x32=1792

4)Rolling a die =1/6,cuttingt a 6 froma deck is 4/52,Probability =1/6x4/52=1/78

5)$P(x=2)=(5/6)^2(1/6)=25/216$

Tutorial 321 Questions

1)If222 222 222 222 222 is divided by 222,find the number of digits in the quotient

2)Find the sum of the series25/72+25/.90+25/110+ 25/132+.........25/9900.

3)A sequence$t_1, t_2, t_3$,.....is defined by$t_1=1000$ and $t_{n-1}$ 1.06$t_{n-i}$ where n is a positive integer and $n\geq 2 find$ thevalue of n such that $t_n > 3000$

4)Find the length of the common chord of the two circles $x^2+y^2=4$ and $x^2+y^2-6x+2=0$

By MrS.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

சில வேளைகளில் ஒளியானது துகள்கள் மாதிரி இருக்கிறது. வேறு சில சமயங்களில் அலைபோலத் தன்னைக் காட்டுகிறது. ஆயின் எதுசரி.? சென்ற தடவையில் இப்படித்தான் பார்த்தோம், ஆய்வாளர்களின் ஆய்வுகள் வழியில். ஏதோ ஒன்றாகத்தான் ஒளியிருக்க வேண்டும் என அவர்கள் எண்ணினார்கள். இருவருமே தத்தமது நிலைகளில் உறுதியாக நின்றார்கள். ஆனாலும், ஒளி எப்படியானது என்ற கேள்வியின் விடையாக, நியூட்டனின் துகள்கள் கொள்கையே செல்வாக்குப் பெற்றது. நியூட்டனின் பிரபலமும் அதற்கு ஒரு காரணமாக இருந்தது என்பதும் மறுப்பதற்கில்லை. இருப்பினும் ஐகனின் அலைக் கருத்தினையும் விஞ்ஞானிகள் முற்றாக ஒதுக்கி வைக்கவில்லை.

இந்நேரத்தில் இன்னொரு விதமாகவும் ஒளியின் செலுத்துகை பற்றி நியூட்டனும் ஐகனும் கூறியிருக்கலாம். ஒளியின் செலுத்துகை துகளாகவும் இருக்கலாம் இன்னொரு சந்தர்ப்பத்தில் அலை வடிவிலும் அமையலாம். இப்படியாக கருத்தினை நியூட்டனோ அல்லது ஐகனோ அன்றேல் வேறொருவரோ ஒளியினை இரண்டு நிலையிலும் காணலாம் என அப்போது கூறவில்லை. அப்படிக் கூறினால் அதற்கு விளக்கமும் கூறவேண்டுமே என்ற எண்ணம் இருந்திருக்குமோ தெரியவில்லை. அது அல்லது இது என்ற நிலையைத்தான் தேடினார்கள். பொதுவாகவே விஞ்ஞான முடிவுகளுக்கான விளக்கங்களை, நிறுவல் களை கலிலியோ கலிலியின் காலத்தின் பின்னராகக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஒளியிற்கான இந்த இழுபறி எல்லாம் ஐரோப்பாவில்தான் நடந்து கொண்டிருந்தது. எங்களது பக்கமாக சின்னச் சிலும்பலும் இல்லை. நம்மவர்களின் சிந்தனைகள் எல்லாம் வேறு திசையில் போய்க் கொண்டி ருந்தன. இல்லையென்றால் பொருட்களின் மிகச் சிறிய கூறாக அன்றே அணுவினைக் கண்டவர்கள் ஒளியின் பிரச்சனைக்கும் தீர்வினைத் தந்திருப்பார்கள்தான். இருந்தி ருந்தால் ஒருவேளை நம்மவர்களில் ஓரிருவர் ஒளி தன்னை இரண்டாகவும் காட்டிக் கொள்ளும் கெட்டிக்காரத் தன்மையது என அப்போதே கூறியிருந்தாலும் கூறியிருக்க லாம். ஏனெனில் ஆண்டவனையே ஆணாகவும் பெண்ணாகவும் அர்த்தமுடன் காட்டி, அந்த அர்த்தமுள்ள பெயரையும் கொடுத்தவர்கள் நாமல்லவா.

ஒளியின் மர்மமறி பாதையில் ஒரு இடைச் செருகல். ஈர்ப்பு என்பது பற்றியும் கொஞ்சம் மேலோட்டமாகத் தெரிந்து கொள்வோம். நியூட்டன் என்ற பெயரைக் கேட்டதுமே ஈர்ப்பின் ஞாபகமும் வந்துவிடும் அல்லவா! ஈர்ப்பினை விட்டு நியூட்டனைப் பற்றிப் பேசவே முடியாது. இயற்பியல் இரகசியங் களில் கூட ஏதோ ஒருவகையில் நியூட்ட னின் ஈர்ப்பும் தெரிந்திருக்க வேண்டியுள்ளது.

17ம் நூற்றாண்டு வரையில் ஈர்ப்பினைப் பற்றி யாருக்கும் பெரிய அளவிற் தெரிந்திருக்க வில்லை. நீரும், சடப்பொருள் களும் அவற்றின் இயல்பு காரணமாக புவியில் வந்து விழுகின்றன என அரிஸ்ரோற்றில் தன் காலத்தில் கூறியிருந் தார். கலிலியோவின் கவனத்தையும் புவியின் ஈர்ப்பு கவர்ந்துதான் இருந்தது. கலிலியோவின் காலத்தில் ஈர்ப்பு என்ற கருத்தே இருக்கவில்லை. ஆனாலும் அவரது பிரபலமான சாய்ந்த கோபுரப் பரிசோதனைகள் ஈர்ப்புச் சிந்தனையின் ஆரம்ப வடிவம் எனலாம். இதனைத் தொடர்ந்து கெப்பிளர் என்ற ஜெர்மனியின் அருமையான விஞ்ஞானி ஈர்ப்பிற்கான அடியினை எடுத்துக் கொடுத்தார். முழுமை யான விஞ்ஞானத்தனம் கொண்ட விஞ்ஞானி யாரெனக் கேட்டால் கெப்பிளரைத்தான் கூறுவேன்.

ஈர்ப்புவிசை - கோள்களின் இயக்கங்களுக் கான விதிகள் மூன்றினை அக்காலத்தில் கெப்பிளர் கொடுத்திருந்தார். கதிரவனை அதனது கோள்கள் நீள்வட்டப் பாதைகளில் அவ்விதிகளுக்கு இணங்கவே சுற்றி வருகின்றன என்பதைக் கெப்பிளர் காட்டி, அவ்விதம் கோள்கள் இயங்குவதற்கு, கோள்களுக்கும், கதிரவனுக்கும் இடையில் ஏதோ ஒரு மர்மமான விசை செயற்பட வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்நிலையில் நியூட்டனின் நண்பர் ஹேலி என்பவர் தூமகேதுகளின் (வால்வெள்ளிகள்) இயக்கங்கள் பற்றி ஆய்வுகள் செய்து கொண்டிருந்தார். இத் தூமகேதுக்கள் கெப்பிளர் கூறிய கோள்களின் இயக்க விதிகளுக்கு அமைவாக இயங்குகின்றனவா எனத் தமது நண்பரும் கணித விற்பன்னருமான நியூட்டனைக் உதவியாகக் கேட்டுள்ளார். அந்நேரத்தில் நியூட்டன் தனது இயக்க விதிகளை வெளியிட்டிருந்த காலம், தனது நண்பரது சிக்கலைத் தீர்க்க முனைப்பட நியூட்டனுக்குக் கெப்பிளர் குறிப்பிட்டிருந்த அந்த மர்ம விசை எதுவெனத் தெரியலாயிற்று. ஈர்ப்புவிசையும் வெளிவந்தது, ஈர்ப்பு விதியும் பிறந்தது.

இதன்படி, முதன் முதலின் ஈர்ப்பின் வலிமையை உலகினருக்குக் காட்டியவர் நியூட்டன்தான். நியூட்டனின் இயக்கவிதி-களைப் போலவே அவரின் ஈர்ப்புவிதியும் முக்கியமானதாகும். அதனை அகிலவிதி என்பார்கள். ஏனெனில் பேரண்டத்தில் உள்ள அத்தனை பொருட்களுமே ஒன்றை ஒன்று ஈர்த்துக் கொண்டு இருக்கின்றன என்பது நியூட்டனின் ஈர்ப்புவிதியின் கூற்றாக இருக்கின்றது. இந்த விதியினைப் பற்றிய விளக்கங்கள்தான் இப்போது சிக்கலுக்குள் இருக்கின்றது.

இரண்டு திணிவுகளுக்கு (பொருட்களுக்கு) இடையே கண்களுக்குப் புலப்படாத மர்மமான விசை ஒன்று செயற்படுகிறது என, நியூட்டனின் ஈர்ப்புவிதி கூறுகிறது. இந்த ஈர்ப்புவிசையின் பருமனானது, பொருட்களில் உள்ள சடத்தின் (திணிவில்) அளவிலும், பொருட்களுக்கு இடையிலான தூரத்திலும் தங்கியுள்ளது. திணிவு கூடும்போது பொருட்களுக்கு இடையேயான ஈர்ப்புவிசை யும் அதிகரிக்கும். திணிவினை இரண்டு மடங்காக்குகையில் ஈர்ப்புவிசையும் இரண்டு மடங்காக அதிகரிக்கும். பொருட்களுக்கு இடையில் உள்ள தூரம் அதிகரிக்கும் போது, ஈர்ப்புவிசை குறையும். தூர அதிக ரிப்பின் வர்க்கத்திற்கு நேர்மாறான விகி தத்தில் ஈர்ப்புவிசை குறையும். அதாவது பொருட்களுக்கு இடையிலான தூரத்தினை இரண்டு மடங்காக்கினால் செயற்படும் ஈர்ப்புவிசையானது நான்கு ($2^2 = 4$) மடங்கால் குறைந்துவிடும். இந்த இரண்டாவ தினை நேர்மாறு வர்க்கவிதி என்பார்கள். நியூட்டனின் கெட்டித்தனத்தை பறைசாற்றிக் கொண்டு இருப்பது இந்த நேர்மாறுவர்க்க விதிதான். எப்படித்தான் கண்டுபிடித்தாரோ! இக்காலத்தில் நேர்மாறுவர்க்க விதியானது இயற்பியலில் பல இடங்களில் பாவிக்கப் பட்டுக் கொண்டிருந்தாலும் அடியெடுத்துக் கொடுத்த பெருமை நியூட்டனுக்குத்தான். இதைவிட இன்னமும் புதிராகவுள்ள விடயம், ஈர்ப்புமாறிலியின் பெறுமானம். ஈர்ப்பு விதியை-யக் கணிதச் சமன்பாடாகக் கொடுக்கையில், விதியின் விகித வடிவினைச் சமன்பாடாக்கு வதற்கு, மாறாத ஒருமைக் கணியம் ஒன்றினை சமன்பாட்டில் புகுத்துவது கணித வியலாளர்களின் வழக்கு. அப்படி புகுத்தப்படும் மாறிலியின் பெறுமானங்களை யும் கண்டு கொள்வார்கள். அதுபோலவே நியூட்டனும் தனது ஈர்ப்புவிதியினைக் கணித வடிவிற் கொடுக்கையில் ஒரு மாறிலிப் பெறுமானத்தைப் புகுத்தினார். அந்த மாறிலி யின் பெறுமானத்தைக் கணித்தும் கொடுத்திருந்தார். எப்படிக் கணித்தார்? இன்னமும்தான் ஒரு தடயமும் இல்லை என்கிறார்கள். ஈர்ப்புமாறிலியின் (குறியீடு G) பெறுமானம் $6.67\ 10^{11} Nm^2/kg^2$. இன்று இயற்பியலில் பல மாறிலிகள் பயன்படுத்தப் படுகின்றன. ஆனாலும் ஈர்ப்பு மாறிலியின் பெருமைக்கு நிகரானவை எதுவுமில்லை.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இனி ஈர்ப்பினைப் பற்றிய சிக்கலான விடயங்களுக்கு வருவோம். நியூட்டனின் கருத்துப்படி, ஈர்ப்புவிசையானது சடுதி யானது. எவ்வளவு தூரத்திற்கு அப்பால் இருந்தாலும் ஈர்ப்புவிசையின் விளைவை அப்பொருள் உடனடியாக அனுபவிக்கும். எப்படி என்றால், எங்கள் நிலவின் திணிவை (பாரம் என்போமே) சடுதியில் இரண்டு மடங்காக்கினால், புவியில் ஏற்படும் சந்திரனால் ஆன ஈர்ப்பு விசையும் அக்கணமே இரண்டு மடங்காகிவிடும். இதனை ஆங்கிலத்தில் "action at a distance" என்பார்கள். இது சரிதானா? நியூட்டனின் காலத்தில் யாருமே இப்படிக் கேட்கவுமில்லை, அதனை ஆராயவுமில்லை. ஆனாலும் சரி பிழை என்பவற்றிக்கு அப்பால், இந்த 'உடனடித் தாக்கம்' என்கிற நியூட்டனின் கருதுகோள் அபாரமானது என்பதனை மறுக்க முடியாது. அவரது முடிவுகளை கனகச்சிதமாகக் காட்டிக் கொண்டிருந்தது அந்த எடுகோளேதான்.

அடுத்த தடவையில் இன்னமும் தெளிவுபடுவோம்.


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca





AGARA
ACCOUNTING & TAX SERVICES
GTA SQUARE
Middlefield & Finch

- Consulting
- Business registration
- Incorporation
- Full cycle of accounting
- Corporate tax
- Pay roll
- HST Rebate

2015 TAX FILING

- Over 20 years of experience
- E-filing
- Reasonable Rate
- Quick refund



CALL - 416.275.5788

# EDUCATION

## Review Questions16-09

### ➢ CHEMISTRY 11

An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g. Determine the atomic mass of X and indentify the element.

### ➢ CALCULUS 12

(i) Find the equation of the tangent line to the function $f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x = 1$

(ii) Determine $\frac{d_x}{d_t}$, when $xy^2 = 32$

$$y = 2 \ and \ \frac{d_y}{d_t} = 8$$

(ii) A 5m ladder is leaning against a wall. If the top of the ladder is sliding down the wall at 1 m/s , how fast is the bottom of the ladder moving away from the wall when the top of the ladder is 2m from the ground ?

### ➢ PHYSICS 12

Two masses A (5kg) and B (2kg) connected by a cord passes over a mass less frictionless pulley P, fixed on an inclined surface (30°) as shown below. If the system is released ($\mu_k$= 0.15), calculate the acceleration of the system.

### ➢ BIOLOGY 12


Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication.

Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

### ➢ PHYSICS 11

A window washer pulls himself upwards using a bucket- pulley apparatus. The combined mass of the washer and the bucket if 72 kg.

(a) Determine the downward force that he applies to raise himself slowly at a constant speed.



(b)What force should be applied if he wants to move upwards with an acceleration of $1.0 m/s^2$.

## Answer Key : 16-08

### ADVANCED FUNCTIONS 12

$$\frac{P_{(x)}}{q_{(x)}} = Q + \frac{R}{q_{(x)}}$$

$$q_{(x)} = (x-2)(x+2)$$

$$q_{(x)} = x^2 - 4$$

$$\frac{P_{(x)}}{(x-2)(x+2)} = (2x+1) + \frac{1}{(x-2)(x+2)}$$

$$P_{(x)} = 2x^3 + x^2 - 8x - 3$$

$$f(x) = \frac{2x^3 + x^2 - 8x - 3}{x^2 - 4}$$

### ➢ CHEMISTRY 12

Disproportionation - One substance undergo oxidation and reduction simultanaeusly.

Comproportionation -Two reactants each contain same element with a different oxidation number forms a product where the same element reach same oxidation number.

$FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-} + 2H_2O$

$17 HNO_3 + 2HCl + NH_4Cl \rightarrow 18NO_2 + Cl_2 + HClO_4 + 11H_2O$

Answer key
16-09 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# ஸ்காபரோ முதுதமிழர் சங்கத்தின் புத்தாண்டுவிழா கொண்டாட்டமும் 2016ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை பதவி ஏற்பு வைபவமும்




***Left to Right Seated***
1. Mrs. Satkunathevy Panchalingam (Committee)
2. Mr Ratnam Rukmanikanthan (Asst. Treasurer)
3.Mr Sivapragasam Ambalavanar (Treasurer)
4. Mr Navaratnam Kanagenthiran (President)
5. Mr Sathasivam Paranthaman (Secretary)
6 Mrs Atputharani Kangesan (asst. Secretary)
7. Ms. Geraldine messy Innasithamby (Committee)

***Standing left to right***
1. Mr Mark Soosai (Committee).
2. Mr p. Adaikalam (Committee Member).
3. Mr C K Sivalingam (committee Member)
4. Mr M Karunaharan (Committee)
5. Mr N Sivapatham (Committee Member))



# CUSTOM BUILD HOME

## Build Your Personalized Custom Build Home
## Starting From $139 / sq ft

## Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்

## Industrial Buildings from $85 / sq ft

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)



Uthayan Aiyadurai
Sales Representaive
Email:aiya14@gmail.com

Direct: 416.999.3555

**Seelan Siva Real Estate**
Buy.Sell.Invest

Direct: 416.451.0271



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Email:seelansiva@gmail.com

' கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது! '
web:www.egtahomes.com

**$168,000**



**Scarborough**
Main Floor Unit In Gta Square Shopping Mall. High Traffic Area & Plenty Of Surface And Underground Parking Avail

**$299,000**



**Mississauga**
1+Den Luxury Condo
Granite Counter Top, Walk Distance To Sq One And City Centre. With One Underground Parking And One Locker. 50,000 Sf Of Amenities

**$399,000**



**Markham**
Location! Location! Unit Facing Markham Rd And Steeles Ave Intersection.
High Traffic! Great Exposure! Lots Of Parking
Ideal Location For Retail And Professional Services

COLLECTION FROM THE $275,000's



**GTA**
Location! Location! Tridel High Quality Condos
1, 1+Den, 2, 2+Den,3 Beds.
Luxury Amenities

## Call Us for More Information.

**HOMELIFE/GTA Realty Inc.,**
Brokerage*
Bus:(416)321-6969

**5215 Finch Ave. E, Suite 203, Toronto, ON M1S-0C2**
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

நகைச்சுவைத் தொடர் 332

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்




மழையா வெயிலா குளிரா... வெளியில் போவதா இல்லையா?
உலகர் மாறிமாறி நடந்துகொண்டிருந்தார்.

இண்டைக்கு என்ன கொமெடி கலாட்டா...? என்றபடி
வந்தா...செக்கண்ட்புளொர் செல்லம்மா.
கொமெடி கலாட்டா என்பது தமிழக தேர்தலுக்காக நடக்கும்
அரசியல் மேடைப் பேச்சுக்கள் தான்.



அமெரிக்காவின் 400ஆவது ஆண்டுவிழா அதாவது கிறிஸ்தோப்பர்
கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த 400ஆவது வருடம்.



10 சமயத்தைச் சேர்ந்தவர்கள் சமயச் சொற்பொழிவாற்றினர்.
இந்தியாவிலிருந்து இந்து சமயத்திற்காக சுவாமி விவேகானந்தர்
கலந்து கொண்டார் 11 செப்ரெம்பர் 1893.
அன்று இந்தியாவில் விநாயக சதுர்த்தி. (அதுவும் 911 தான்)

(அமெரிக்க)..சகோதர சகோதரிகளே.. என ஆரம்பித்தார். ஆரம்பித்ததும் சபையினர் எழுந்து நின்று கரகோசம் செய்தனர். அவரால் தொடர்ந்து பேசமுடியாதளவிற்கு கைதட்டல். அவர் பேசியது 4 நிமிடம் தான். (15 வாக்கியங்கள் 473 சொற்கள்) மறுநாள் முக்கிய பத்திரிகைகள் அதனை தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. ஆன்மீகம் சமயப்பற்றுள்ள அவர்களது நாட்டிற்கு கிறிஸ்தவ சமயம் பரப்ப எப்படி அனுப்புவது என கருத்தும் தெரிவித்திருந்தனர்.
எத்தனையோ வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் சரித்திரமாகவே அமைந்துள்ளது.




ஒரு மேடையில் பேசுவது எப்படி இருக்கவேண்டும்?
சபையோர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! அனைவருக்கும் வணக்கம்.
லேடீஸ் அண்ட் ஜென்ரில்மென்!
மெய்யடியார்களே! அன்பான இறை மக்களே! என
ஆரம்பிக்கும்பொழுது மதிப்பாக, மரியாதையாக ஆரம்பிப்பார்கள்



ஆனால் இன்றைய அரசியல் கூட்டங்கள்
ஆட்டிலறி அன்னம்மா சொல்வதுபோல கொமெடி கலாட்டாதான்.

டேய் பொத்தடா வாய்....வெளியிலை போடா......

முறைத்துப் பார்ப்பது, பல்லை நெருடுவது, நாக்கைக்கடிப்பது, மைக்கால் அடிப்பேன் அதற்குமுன் ஓடடா...
அநாகரிக சொற்கள்தான் மேடைகளில். இவர்கள் நாடாளுமன்றம் சென்றால் அங்குள்ள உறுப்பினர்கள் ஹெல்மெற்றுடன்தான் செல்லவேண்டும்.



மிளகாய் தூள் விக்கிற விலையிலை 'தெறி' படம் பார்க்கப் போனவைக்கு மிளகாய் தூள் வீசிப்போட்டினமாம். தெறி படம் பாக்கப் போனதும் காணும் குடல் தெறிக்க ஓடினதும் காணும் என பிறிம்லி மீனா அழுதழுது சொன்னது ஆட்டிலறி அன்னம்மா, ஜபொட் அகிலாவிற்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. சிரிப்பை அடக்கி சமாளித்துக்கொண்டு அப்ப இனி எப்ப மிச்சம் பார்க்கப்போறாய்? மீனா நானும் வாறன் எண்டு செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல.. கெல்மெற் போட்டுக்கொண்டு போ. அப்பதான் கண்ணுக்குள்ளை மிளகாய்த்தூள் போகாது என்று சொல்லும்போது உலகர் ரி.வி.யில் திரும்பத் திரும்ப தெறி படத்து மிளகாய்தூள் வீச்சு செய்தியை பார்த்துக் கொண்டிருந்தார்.

உலக நாடுகளில் எவ்வளவோ பிரிவு பிளவு இருந்தாலும் பிரச்சினைகள் ஒன்றுதான். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மது, போதை வஸ்து.. போன்றவற்றிற்கு அடிமைப்படுவதும் நிலைதடுமாறிய வாழ்க்கைப்பாதைக்கு இழுத்துச் செல்லப்படுவதும். அதனைத்தடுக்கும் வழியை விட பாடசாலைகளுக்கு பக்கத்தில், குடிசன வதிவிடங்களுக்கு பக்கத்தில் அரிசி மா கிடைக்கிறதோ இல்லையோ மாணவர்கள் புத்தகத்தை விட மேலாக மதிக்கும் போதைப்பொருட்கள் பாதையெல்லாம் கிடைக்கிறது.

ரொறொன்ரோ பொலிஸ் திணைக்களம் வெளியிடும் அறிக்கையில் இந்த வருடம் 4 மாத நிறைவுக்குள் எத்தனைபேர் குடிபோதையில் வாகனமோட்டி விபத்துக்குள்ளாகியுள்ளனர். எத்தனை உயிரிழப்பு, உடல் பாதிப்பு.

"பாதை மாறும் போதை வேண்டாம் பண்பைக் காப்போம் கலகலப்பு..."
(கலகலப்பு திரைப்படத்தின் பாடல் வரிகள்)




1. மே தினம்

1. இளம்பிள்ளை வாத தடுப்பு நோய் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. (1960)




2. உலகம் முழுவதும் வயது வித்தியாசமின்றி விரும்பி பார்க்கும் மிக்கி மவுஸ் எனும் காட்டுன் பாத்திரம் 1928 இல் வால்ட் டிஸ்னி அவர்களால் வரையப்பட்டது.

3. சர்வதேச பத்திரிகை சுதந்திர நாள்

5. மாவீரன் நெப்போலியன் நினைவு தினம் (1821)

4. அனைத்துலக தீயணைக்கும் படையினர் நாள்.




5. சர்வதேச மருத்துவிச்சிகள் நாள்.

8. உலக செஞ்சிலுவை நாள்


11. மகரிசி கவியோகி சுத்தானந்த பாரதியார் (நினைவு தினம்)
வேங்கட சுப்பிரமணியன் (1897..1990)



10. மதேர்ஸ் டே. கனேடிய அன்னையர் தினம்.

12. உலக செவிலியர் நாள்

13. தவில் வித்துவான் லயஞான குபேர பூபதி
தட்சணாமூர்த்தி நினைவு தினம்.



15. கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை நினைவு நாள். (1928-2003) நடிகர், நாடகத் தயாரிப்பாளர், இலங்கை வானொலியில் தாளக்காவடி நாடகத்திற்காக பரிசு பெற்றவர்.


# கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2016

**திகதி:** மே 08, 2016, ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** பிற்பகல் 3:00 மணி

**இடம்:** *GTA Square (Second Floor)*
*5215 Finch Ave. E., #224*
*Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் தலைமுறைகள் அனைவரையும் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: **416.414.3327 /416.299.6645**
**416.291.9956 / 416.283.1439**



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வருடாந்த

# பொதுக்கூட்டம்

நமது கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தினை வருகிற மே – 14 – 2016 (சனிக்கிழமை) மாலை 3:00 – 6:00 மணி வரையில் ***GTA Square (Second Floor) 5215 Finch Ave. E., #224*** வில் நடத்த உத்தேசித்துள்ளோம். அன்று நாம் புதிய உறுப்பினர்கள் தேர்வோடு, புதிய அங்கத்தவர்களையும் இணைக்க உள்ளோம். தமிழ் அன்பர்கள், இலக்கிய ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அக்கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

கலாநிதி சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி
தலைவர்

திருமதி சிவநயனி முகுந்தன்
செயலாளர்.

# பொம்பேய் என்ற நகரம் எரிமலை சீற்றத்தால்......

## *Pompeii destroyed by volcano*

இளந்தென்றலாய் வீசும் இயற்கைதான் கொடிய புயலையும் வீசச்செய்கிறது. அமைதியாய்ச் சென்று கடலோடு கலக்கும் ஆறுகள் தான் சிலசமயங்களில் காட்டாறு களாய் மாறி உயிர்களைக் காவுகொள்கின் றன. நுரையாய் நிலத்தைத் தழுவும் கடல் அலைதான் ஆழிப்பேரலை அனர்த்தமாய்த் தன் கோரமுகத்தைக் காட்டி நின்றது. மனிதனுக்கு அமைதி என்றொரு முகமிருந்தால், சீற்றம் என்றொரு முகமும் இருக்குமென்றே கூறுவர். பாரத்தை ஏற்றி எத்தனை துன்பம் செய்தாலும் பொறுமை யாய்த் தாங்கிக் கொள்ளும் பூமாதேவிதான், சில சமயங்களில் புவி நடுக்கமாய், எரி-மலை வெடிப்பாய்ச் சீற்றம் கொள்கிறாள்.

அமைதியாக இருந்த வசூவிஸ் மலை (Mount Vesuvius) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கி.பி 79ம் ஆண்டு ஆகஸ்ட் 24ம் திகதி செவ்வாய் கிழமை மதியம் சீற்றம் கொண்டது. 12 மைல் உயரத்திற்கு எழுந்த $1300^{\circ}F$ உஸ்ணம் கொண்ட தீ மழை மணிக்கு 70 மைல் வேகத்தில் பொழிந்ததோடு சென்று 20,000 மக்கள் வாழ்ந்த இத்தாலியில் நேப்பில்ஸ் என்ற மாநகரத்திற்கு தெற்கு பக்கமாக சில மைல்கள் தொலைவில் பொம்பேய் (Pompeii) என்ற நகரத்தை அழித்து மண்ணோடு மண்ணாய் புதைத்து மறைத்து விட்டது. (Pompeii is a ruined Roman city near modern Naples in Italy).

மவுண்ட் வசூவியஸின் கீழ், ஆபிரிக்க தட்டில் ஒரு சிதைவு அல்லது கசிவு ஏற்பட்டதன் விழைவு தான் எரிமலை சீற்றம் அன்றய அழிவுக்குக் காரணம் என விஞ்ஞானிகள் கண்டு பிடித்ததாகவும் அறிகிறோம். புதைந்து 1650 ஆண்டுகளுக்கு பிறகு அதாவது 1748 இல் அகழ்வராய்ச்சி யின்போது அந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது.

ரோமானிய (Roman) காலத்தில் எரிமலை பூமியின் கண்ணீர் கசிவு என்று நம்பியுள்ளார்கள். எரிமலைகளின் விருப்பம் போல் மாற்றமடையும் தன்மை கடவுளின் செயல்பாடுகளாக மட்டுமே இருக்கும் என்றும் நம்பியுள்ளார்கள். ஏற்கனவே ஆபத்தை அறியவோ மக்களுக்கு எச்சரிக்கை செய்ய வசதிகள் அவ்வளவு இல்லாத காரணத்தால் பாதி மக்கள் சிறிது நேரத்துக்குள் குறைந்தது 15 அடி உயரமான சூடான சாம்பலுக்குள் உயிரு டன் புதையுண்டு மாண்டுள்ளார்கள். பேக்கரி ஒன்றில் பாண் போறணைக்குள் இருக்கிறது, பிள்ளைகள் வெளியில் விளையாடிக் கொண்டிருகிறார்கள், பெண்கள் தத்தமது வீட்டுக்குள் வேலைகள் செய்து கொண்டிருக்கிறார்கள், வீட்டு மிருகங்களும் தத்தமது வேலைகள் செய்தபடியே இருகின்றன. வியாபார நிலையங்கள் திறந்த



படியே உள்ளது. எச்சரிக்கை ஏதும் அவர்களுக்கு கிடைத்ததாக இல்லை. மூடியிருந்த சாம்பல் குவியலை நீக்கிய போது 2000 மேற்பட்ட உடல்கள் வரை சிலைகள் மாதிரி இருக்கக் கண்டார்கள்.

இவற்றில் பல உடல்களை இன்றும் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். அக்கால கல் பதித்த தெருக்கள், குதிரை வண்டி சில்லு பட்டு பதிவான கல் பாதை-தகள், மாபிள் கற்களால் பதித்த சித்திரங்கள், மட் பாத்திரங்கள் போன்ற பல பொருட்கள் அந்தந்த இடங்களிலே இருக்கிறது. இவற்றை பார்வை இட தினமும் மக்கள் கூட்டம். பல நாடுகளில் இருந்தும் உல்லாசப்பயணிகளாக போம் பேய் நகருக்கு வருகிறார்கள். பொம்பேய் (Pompeii) என்ற நகர அகழ்வின் போது அக் (ரோமானிய) காலத்து வாழ்க்கை முறைகள் நகர வடிவமைப்பு வழிபாட்டு முறைகள் என பல விடயங்கள் ஆர்வத்தை தூண்டியதால் உள்நாட்டு அரசாங்கம் பணத்தை செலவு செய்து புதைந்த மிகுதி கட்டிடங்களையும் மீட்டு மனித குலத்திற்கு ஏற்பட்ட அழிவு மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய பாதுகாத்து வைத்தத னால் 1997இல் உலகில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய நகரம் என்ற அங்கீகாரம் ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பினால் கொடுக்கப்பட் டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 2.6 மில்லியன் பார்வையாளர்களை ஈர்க்கும் இத்தாலியில் மிகவும் பிரபலமான சுற்றுலா தளங்களில் ஒன்று இதுவாகும்.

எரிமலை வெடித்துச் சிதறும்போது, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலும் தீமழை பொழிவதோடு, உலகளாவிய பருவ நிலை வெட்ப மாற்றங்களையும் உருவாக் கும் தன்மை கொண்டவை. இவ்வெரி-மலைகள், சில லட்ச வருடங்களுக்கு ஒரு முறைதான் வெடிக்கும். உறங்கும் எரிமலை,

**- சுந்தரம் இந்திரராஜா -**

அழிந்துவிட்ட எரிமலை, உயிர்த்துடிப்புடைய எரிமலை என மூன்று வகை.

வெடித்துச் சிதறும் எரிமலை உமிழ்வுகள் நீராவி ($H_2O$), கார்பன் டையாக்ஸைடு ($CO_2$), சல்ஃபர் டையாக்ஸைடு ($SO_2$), ஹைட்ரஜன் குளோரைடு (HCl), ஹைட்ரஜன் ஃப்ளோரைடு (HF) மற்றும் சாம்பல் (தூளான மற்றும் மென்மையான பாறைகள்) ஆகியவற்றை வாயு மண்டலத்திற்கு மேலுள்ள பகுதியில் பூமியின் தளத்திற்கு மேலே 10–20 மைல்கள் வீசியெறிகிறது. தீ மழை அல்லது தீ குழம்பு வால்கனோ (Volcano) என்ற பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.



வல்கனோ அதாவது ரோமானிய (Roman) புராணத்தில் நெருப்புக் கடவுளின் பெயரான வல்கன் என்பதிலிருந்து உருவானது.

உயிர்த்துடிப்புடைய இந்த மவுண்ட் வசூவிஸ் எரிமலை 1944 இல் சீற்றம் கொண்டதாக அறிகிறோம். மக்கள் இனி அப்படி ஏதும் பெரிதாக நடை பெறாது என்ற நம்பிக்கையில் போம்பெய்யை சுற்றி ஆயிரக் கணக்கில் குடியேறி விட்டார்கள். இன்று முன்னையது போல் சீற்றம் கொண்டால் 0.75 மில்லியன் மக்கள் இறப்பார்கள்.




ACCOUNTING & SERVICES

BESTSENSE
BUSINESS ACCOUNTING & TAX SOLUTIONS

- Personal tax return (T1)
- Self-employed Business tax return
- Corporate tax return (T2)
- Financial statement preparation
- Bookkeeping services
- GST/HST & WSIB return
- Payroll preparation
- Business incorporation & registration
- Accounting software setup (Quickbooks)

> Bookkeeping services starting from $100/- per month
> Personal taxes stating from $30.00
> Corporation taxes starting from $300.00

BESTSENSE BUSINESS ACCOUNTING & TAX SOLUTIONS
4168 Finch Ave. E., Suite PH16, Toronto, ON M1S 3V1
Off: 416 836 5252
Email: bestsensetax@gmail.com
www.bestsenseaccounting.com

# தாய்மை

இறைவனைக் காண நினைத்தேன்
உன்திருமுகம் காணும் முன்பாக..
உணரத் துடித்தேன் சொர்க்கமதை,
உன்னிரு பாதங்களில் பணியும் முன்பாக..

எழுத வார்த்தைகள் இல்லையம்மா..
வளர்த்த விதம் சொல்வதற்கு..
பாடிட சொற்கள் கிடைக்கவில்லை..
பாடுபட்டு படிக்க வைத்ததற்கு!

பாரங்களை இறக்கிட
உன் பாதங்கள் வேண்டும்
சுகமாக தூங்கியெழ
உன் மடிவேண்டும் ஒரு நொடி!

சோகங்கள் தீர்த்திட - உன்
தோள்கள் தான்வேண்டும்!
கண்ணீரைத் துடைத்திட - உன்
கைகள் மட்டுமே வேண்டும்!



விறகடுப்பின் புகையில்நீ
வெந்துளம் பசிபோக்கினாய்!
வியர்வை நீரூற்றி எங்களை
வளர்த்து ஆளாக்கினாய்!

பட்டங்கள் பெறவைத்துப்
பார்த்துப் பூரித்துப்போனாய்!
வெற்றிகள் பலகொடுத்து
வேதனைகளை விரட்டினாய்!

கவிதைகளால் தாலாட்டி
கண்ணுறங்கச் செய்தாய்!
வர்ணனைகள் பலதந்து என்னுள்
வாழ்ந்துகொண்டுதானிருக்கிறாய்!

ஆறுதல் கூறிட..
அன்பால் அரவணைக்க
தைரியம் தந்திட
தேற்றி நிமிர்த்திட..
தாயே! என்னருகே
நீ வேண்டும்! நீ வேண்டும்!

தாயான பின்பும்
தாய்மைக்காக..
தவித்திடும் சேய்..

*- காரைக்குடி பாத்திமா ஹமீத்*
*ஷார்ஜா*

# கவிஞர்...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

மாணவர்களுக்குப் புதிய சொற்களாக இருக்கும். இந்தப் பாடலின் பொருளும் மாணவர்களின் முயற்சியை அல்லது தன்னம்பிக்கையை வளர்க்க உதவுகிறது.

கதைப்பாடல்கள் என்றால் பொதுவாகப் பாலர்கள், குழந்தைகள், சிறுவர்கள் என்று எல்லாத் தரத்தினருமே விரும்புவர். கவிஞர் கந்தவனம் இப்படியான கதைப் பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். அவரது கதைப்பாடல்கள் பத்திரிகைகளில் அமோக வரவேற்பைப் பெற்றன. காரணம் அவற்றிற் பல இறைபக்தியை வளர்ப்பனவாகவும் எளிமையுடையனவாகவும் எமது கலாச்சாரத் தைப் பிரதிபலிக்கும் கதைகளாகவும் இருந்தமையாகும்.
இதோ அவர் பாடிய 'விநாயகரும் அகத்தியரும்' என்கின்ற பாடல்.

அகத்தியர் என்பவர் குறுமுனிவர்
ஆயினும் தவத்தினிற் பெருமுனிவர்
மிகப்பழங் காலத்தில் வாழ்ந்துவந்தார்
விருப்புடன் சிவனடி வணங்கிவந்தார்.

தமிழ்த்திரு நாட்டினில் அவர் ஒருநாள்
தங்கிய காலத்தில் காகம் ஒன்று
கமண்டல மீதினில் வந்திருந்து
கவிழ்த்துநல் நீரினை ஊற்றியது.

காகம் இருந்த இடத்தினிலே
காட்சி அளித்தனன் ஒருசிறுவன்
கோபம் மிகுந்திடக் குறுமுனிவர்
குழப்படிப் பெடியனைக் குட்டவந்தார்.

அழகிய சிறுவனும் ஓடலுற்றான்
அகத்திய முனிவரும் துரத்தலுற்றார்
இளையவன் ஓடிட முனிவர்பிரான்
இடையினில் களைப்புவந் திருந்துவிட்டார்.

அதிசயம் மறைந்தனன் அச்சிறுவன்
அவ்விடம் தோன்றினர் ஆனைமுகர்
விதம்வித வேடத்தில் விநாயகரா
விளங்கினர் உண்மையை அகத்தியனார்.

உன்தலை மீதினில் குட்டவந்தேன்
ஓ!பிழை பொறுத்திட வேண்டுமென்று
தன்தலை மீதினில் குட்டிமிகத்
தாழ்ந்து வணங்கினர் தமிழ்முனிவர்.

உன்பெயர் உன்திறன் உலகமெல்லாம்
ஓங்குக ஓங்குக என்றுசொல்லி
அன்புடன் பிள்ளையார் அருள்புரிந்தார்
அகத்திய மாமுனி மனம்மகிழ்ந்தார்.

காகமாய்க் கணபதி வந்தருளி
கவிழ்த்த அக் கமண்டல நீர்பெருகி
ஆகியோர் ஆறெனப் பாய்கிறதாம்
அதன்பெயர் அழகிய காவிரியாம்!

இவ்விதமாக, பல குழந்தைப் பாடல்களைக் கவிஞர் கந்தவனம் பாடியுள்ளார். இன்னும் பலர் பாடிய பாடல்கள் நல்ல குழந்தைகள் பத்திரிகைப் பரவையுள் மூழ்கிக் கிடக்கின்றன. மஹாகவி, சச்சிதானந்தன், சோ. தியாகராசா, கதிரேசர் பிள்ளை போன்றோரின் குழந்தைப் பாடல்களும் இன்னும் நூல்வடிவம் பெறவில்லை. அவற்றை யெல்லாம் தேடி ஆராயாமல், ஈழத்திலே நல்ல குழந்தைக் கவிதைகள் இல்லையென்று சில பல்கலைக்கழக விமர்சகர்கள்கூட எழுதுவது வியப்பாக இருக்கிறது.

அதிலும் உளவியற் பாடத்தை நன்கு கற்றவரும் குழந்தைப் பாடல்களைப்பற்றி நுண்ணிதாக ஆராய்ந்தறிந்தவருமாகிய கவிஞர் கந்தவனம் அவர்கள் கவிஞர் இ. நாகராஜனின் 'சிறுவர் பாடல்' என்ற நூலுக்கு அளித்த முன்னுரையைச் சரியாக மதிப்பிடும் திறனின்றி வேண்டுமென்றே ஒருவர் தாக்கியுள்ளார். குழந்தைக்கும் சிறுவருக்கும் வித்தியாசம் தெரியாதவர்களுக்குக் கவிஞரின் முன்னுரை விளங்காது தான்.

ஆயிரம் வருடங்களாக ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும், நன்னெறியும், நல்வழியும் படித்து மேலுக்கு வந்து நாலடியார், திருக்குறள், அறநெறிச்சாரம் முதலியவற்றைப் படித்ததனாலேதான் எங்கள் தமிழ்ப் பரம்பரை இன்னும் மாசுபடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதனால், அறநெறிப் போதனை வேண்டாம் என்று எழுதிவரும் விமர்சகர்களைப் பார்த்துச் சிரிக்கவேண்டியுள்ளது.

- நன்றி: ஈழநாடு வாரமலர், 12.2.78

# கற்பனை...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

சொன்னேன். அவன் அடுத்த நாள் வீட்டிலிருந்து எனக்குச் சாப்பாடு கொண்டு வந்தான். எவ்வளவோ சொல்லியும் வற்புறுத்திச் சாப்பிடவைத்தான். எங்கள் வகுப்பாசிரியருக்கு இந்த விடயம் தெரிய வந்து என்னை, அழைத்து வீட்டு நிலமை பற்றிக் கேட்டா. எனக்கு ஆங்கிலத்தில் விரிவாக கூற முடியாததால் முகுந்தன்தான் தமிழில் கூறியதை அவவுக்கு ஆங்கிலத்தில் கூறினான். அவ மிகுந்த ஆச்சரியத்துடன் அப்படியெல்லாம் அவர்கள் செய்யக்கூடாது. இதுபற்றி அதிபரோடு கதைக்க வேணும் என்று கூறினா. எனக்குப் பயமாக இருந்தது. முகுந்தன் 'நீ பயப்படாதே. அங்கு உனக்குச் சாப்பாட்டுக்கு உனது சித்தி காசனுப்புறா. நீ பயப்படத் தேவையில்லை' என்று உற்சாகப்படுத்தினான்.

அடுத்த நாள் பாடசாலை கன்ரீனில் மத்தியானச் சாப்பாடு ஒழுங்கு பண்ணி இருப்பதாக வகுப்பாசிரியர் சொன்னா. முகுந்தன் மத்தியானம் என்னைக்கூட்டிக் கொண்டு போய் கன்ரீனில் ஹம்பேகரும் கோக்கும் வாங்கித் தந்தான். இனி ஒவ்வொரு நாளும் எனக்கு விருப்பமான சாப்பாடு கன்ரீனில் தருவார்கள் என்று முகுந்தன் கூறினான். இதுபற்றி நான் வீட்டில் சொல்லவில்லை. மத்தியாசனச் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறாய் என்று கூட யாரும் கேட்கவில்லை.

ஒரு வாரத்தின் பின் ஒரு நாள் வகுப்பாசிரியர் சொன்னா, 'நாளைக்கு ஒரு கூட்டமிருக்கு நீ பாடசாலை முடிந்ததும் கந்தோருக்கு வரவேணும்' என்றா. எனக்குப் பயமாக இருந்தது. முகுந்தன் சொன்னான் உன்னுடைய விடயம் பற்றிக் கதைக்கு கல்விச் சபையிலுள்ள ஒரு தமிழ் உத்தியோகத்தர் வருவார், நீ பயப்படாமல் அவரோடு எல்லாம் பேசலாம் என்றான். அடுத்த நாள் மூன்று மணிக்கு என்னை பள்ளிக் கந்தோருக்கு வரும்படி அழைப்பு வந்தது. பயந்து கொண்டே போனேன். அங்கு பள்ளி உதவி அதிபரும், வகுப்பாசிரியரும், ஒரு உத்தியோத்தரும் ஓரறையிலிருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். உத்தியோகத்தர் தனக்குப் பக்கத்திலிருந்த கதிரையில் இருக்கச் சொன்னார். சில நிமிடங்கள் அவர்கள் ஆங்கிலத்தில் கதைத்தார்கள். எனக்கு அரைகுறையாக என்னைப் பற்றித்தான் கதைக்கிறார்கள் என விளங்கியது. வந்தவர் சில குறிப்புகளை எனது வகுப்பாசிரியரிடம் கேட்டு எழுதினார். பின்னர் அவரையும் என்னையும் பேசும்படி கூறிவிட்டு, வகுப்பாசிரியரும், உதவி அதிபரும் வெளியேறினர். வந்தவர் தமிழில் மிகுந்த அக்கறையோடு என்னோடு பேசினார். எனது குடும்பம் பற்றியும் வந்தவிதம் பற்றியும் கேட்டார். நானும் மனம் விட்டு அவரோடு பேசினேன். ஆறுதலாகவும் அன்பாகவும் பேசினார். கனடாவில் சிறுவர்களுக்குள்ள வசதிகள் வாய்ப்புக்கள் எல்லாவற்றையும் பற்றிச் சொன்னார். பாடசாலையில் எனக்குள்ள பிரச்சினை களைக் கேட்டு எழுதினார். இலகுவாக ஆங்கிலப் படிக்க வசதிகள் செய்திருப்பது பற்றியும் நானும் அக்கறையோடு படிக்க வேண்டுமென்றும் கூறினார். பின்னர் வீட்டிலுள்ளவர்கள், பற்றியும் அவர்கள் என்னை நடத்தும் முறைபற்றியும் கேட்டார். நானும் ஒன்றையும் ஒளிக்காமல் சொன்னேன். பேப்பர் ஒவ்வொரு நாளும் போடுவதைக் கேட்டு மிகுந்த ஆச்சரியப்பட்டார். பேப்பர் போடுவதற்கு எனக்குத் தரப்பட்ட கூலி ஒரு கோப்பி மட்டுமே எனக் கேட்டு ஆத்திரமடைந்தார். உமக்குத் தரவேண்டிய கூலியை வீட்டுக்காரர்கள் வாங்குகிறார்களா? எனக் கேட்டார். நான் அது பற்றிக் கேட்கவில்லை என்றேன். எல்லாவற்றிற்கும் பேசாமல் இருக்கக் கூடாது, நீயும் உனது உரிமைகளைக் கேட்க வேணும் அவர்கள் செய்வது அநியாயம். நான் இது பற்றிப் பாடசாலை அதிபரோடு பேசுவேன் என்றார். நான் வேண்டாம் சிலவேளை எனக்கு அங்கு இருக்க முடியாமல் வரும் என்று பயப்பட்டேன். அவர் பயப்படத் தேவை யில்லை. போதிய வசதிகள் செய்து தர வேண்டியது அவர்கள் கடமை. நீ பேசாமல் இருக்க அவர்கள் இப்படிச் செய்யக்கூடாது எனக் கூறினார். ஏறக்குறைய அரை மணித்தியாலத்துக்கு என்னோடு பேசிய பின், தேவையானால் தன்னை அழைக்கும்படி கூறி தனது பெயர், தொலைபேசி அச்சடித்த காட்டைத் தந்தார். தேவையானால் பின்னர் வருவதாக கூறிக் கந்தோருக்குப் போனார். நான் வீட்டுக்குப் போகப் புறப்பட்டேன்.

(தொடரும்)

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969



CENTUM
Financial Services Limited Partnership
Broker Licence #: 12697
Ashok Thevarajah
416-770-5373
ashokthevarajah@gmail.com
1 First Canadian Place
100 King Street West. Suite 1600
Toronto, Ontario. M5X 1G5
"Your Finance Friend For Life"



# வெற்றிக்கிண்ணத்துடன் யுனைற்றட் விளையாட்டுக் கழகம்

கடந்த ஏப்ரல் மாதம் 9ம், 10ம் தேதிகளில் Toronto Track and Field Centreல் இடம்பெற்ற ஒன்ராறியோ மாகாணத்தின் 14 வயதிற்கு உட்பட்டோருக்கான தடகள சாம்பியன்சிப் (Track and Field Champion ship) போட்டியில், 6வது வருடமாக யுனைற்றட் விளையாட்டுக் கழகம் 412 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. இதில் ஒன்ராறியோ மாகாணத்தின் 46 விளையாட்டுக் கழகங்களை சேர்ந்த 600க்கும் மேற்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடத்தைவிட 50க்கும் மேற்பட்ட புள்ளிகளை பெற்றதும், 2வது இடத்தைப் பெற்ற Flying Angels Track clubபை விட 158 புள்ளிகள் அதிகமாகப் பெற்றமையும் யுனைற்றட் கழகத்தின் வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது.

கடந்த 10 வருடகால இலட்சியமாக இருந்து வந்த கனேடிய தேசியப் போட்டிகளில் பங்குபற்றுதல் என்ற இலக்கை இன்று அடைந்த நிலையில், இன்று இக்கழகத்தின்



அங்கத்தவர்கள் அதிகரிப்பு இன்னொரு இலட்சியத்தையும் எமக்கு புரிய வைத்துள்ளது. அதாவது பயிற்சி, பங்கு பற்றுதல் என்பதைத்தாண்டி, எமது சமுதாயத்தின் தேவையாக இன்று மாறியுள்ள தேக ஆரோக்கியத்தை பேணுதல், உடல் பருமனை கட்டுப்படுத்தல் போன்ற பயிற்சிகளிலும் கவனம் செலுத்த வேண்டியதாயுள்ளது. அத்துடன் ஸ்காபுரோ, மார்க்கம், Brampton நகரங்களில் மட்டுமல்லாது மற்றைய நகரங்கட்கும் பயிற்சி முகாம்களை நகர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எவ்வளவு தான் ஊடகங்கள் உடல் நலம், உடல் எடையை பேணுதல் போன்றவைபற்றி எடுத்துரைத்தாலும், அயலவர், நண்பர்கள் போன்றவர்களின் அறிவுறுத்தலும், பயிற்சி களை நேரில் பார்வை இடுவதன் மூலமும் உடற்பயிற்சியின் மீது ஆர்வமற்ற இளைஞர் யுவதிகட்கு ஆர்வம் ஏற்படுவதை இம்முறை உள்ளரங்கப் பயிற்சிகளில் நாம் காணக் கூடியதாக இருந்தது. இந்த வெற்றியானது மேலும் பலருக்கு போட்டிகளில் பங்குபற்ற வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பதுடன், பலரை உடற்பயிற்சியின் மீது அக்கறையுள்ளவர்களாக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலதிக விபரங்கட்டு:
facebook: unitedsportclub

Free! Real Estate & Articling Classes*
20 வருடத்திற்கு மேல் ஆதன வியாபாரத்தில் அனுபவமுள்ளவரின் நேரடியான விரிவுரை வகுப்புகள்...
April 01, 2016 இல் புதிய பாடத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது
சரியான சந்தர்ப்பம்
ஏறக்குறைய 100% Success Rate
For Reservation Please Call:
416 321 6969
*Some conditions apply.
HomeLife /GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. East, #203 Toronto, ON.
*Independently Owned & Operated
HOMELIFE HIGHER STANDARDS

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS



NEW TIRES FROM **$75**
USED TIRES FROM **$35**

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

**$99** Car
**$120** SUV

## BRAKE JOB

STARTING FROM
**$159**

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
**$450** Most Cars
**$550** Most Vans

REGULAR OIL CHANGE
**$29.95**
CASTROL OIL CHANGE
**$39.95**
SYNTHETIC OIL CHANGE
**$49.95**
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
**$149.95**

## TRANSMISSION FLUSH

*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

**Email: jrsautotech@hotmail.ca**

Like, Share & Follow us at **www.facebook.com/jrsautotech**

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# NK Movers

## We make moving easy!




***Proudly moving the local community for the last 20 years***

கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்கள்

## WE SPECIALIZE IN:

- RESIDENTIAL MOVING
- COMMERCIAL MOVING
- LONG DISTANCE MOVING

மேலதிகமாக

**$50**

கழிவினை பெறுவதற்கு இக்கூப்பனைக் காட்டவும்

### QUESTIONS TO ASK

Choosing a moving company is a major decision. Making sure to learn about a company's cost and service is very important. Once you are comfortable then make your final selection.

- **Are you an insured company?**
- **Is your staff trained?**
- **Do you offer free estimates?**
- **What payment option is available? Is a deposit required?**
- **Is there a contact number I can contact on move day if there are any questions or challenges?**
- **Are there additional charges for: Stairs?**

  **Travel time from your location to mine?**

  **Evenings and weekends?**

**TEL: 416-566-4260**

**FAX: 1-888-614-9373**

**TEL: 1-800-895-8362**

WWW.NKMOVERS.CA

clientsupport@thenkmovers.com

**32 Howden Road - Unit 2. Toronto, M1R-3E4**

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL
Vany Jeganmohan
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
Bus: 416.321.6969
Fax: 416.321.6963
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca
GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
RE/MAX All Stars Realty Inc., Brokerage
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*
"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.
Allstate
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at...
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
Bridletowne Dental
416 492 3775
Brideltowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

Direct:416-908-5656 MORTGAGES
1st,2nd,3rd
Purchase
Refinance
Renewal
Switches
Equity Line of Credit
For all your Mortgage needs !
Off:416-878-7979 Fax: 416-613-5779
Toll Free: 1-877-687-1214
Our Office:
1585 Markham Road, Unit# 407A
Toronto, M1B2W1 ON Canada
www.mortgagealliance.com
Email:nsubramaniam@mortgagealliance.com
Facebook:Nesan Subra
NESAN
Mortgage Alliance
ACCESS INC. Lic # 11404
Independently Owned & Operated
Corporate Office: 209-8130 Sheppard Ave. East
Toronto M1B 3W3

Free Real Estate Class - Call: 416.321.6969

BUY / SELL PROPERTIES IN GTA
HARMONY & TAUNTON
Bedrooms : 4
Washroom : 3
Lease : $2295
YONGE & 16TH AVE
Bedrooms : 3
Washroom : 5
Asking Price:$599,900
HWY 2 & BOSWELL
Bedrooms : 4
Washroom : 4
Asking Price:$619,900
DUNDAS & HURONTARIO
Bedrooms : 1 + 2
Washroom : 2
Asking Price:$238,880
HALDIMAND
Asking Price:$899,999
BUILDING + BUSINESS
SOMCOE & CONLIN
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$479,900

A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

NAVA LAW
PROFESSIONAL CORPORATION
10 Milner Business Court,
Unit 210, Scarborough, ON M1B 3C6
416.321.1100
416 321 1107
info@nava.law
clientservice@nava.law

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

Ideal Escape Vacation Inc.
Call Mathu
GTA Square
5215 Finch Ave. E. Unit 160
Toronto, ON. M1S 0C2
Ideal Escape
Air Ticketing/Cruise Packaging/Caribbean Vacation Packages/Visa Arrangements/Bus Tour (USA/Canada)
Tel: 416-841-1833
idealescape@gmail.com
www.idealescape.ca